بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 10

இதழ் 10

# பதர்

வாரா இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ரமலான் 05 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - அமான் 06 ★ 06 மார்ச் 2025


## அல்லாஹ்வின் கட்டளை

وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ ؕ وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ

**பொருள்**

பொறுமை, தொழுகை ஆகியவை மூலம் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக பணிவுடையவர்களைத் தவிர (மற்றவர்களுக்கு) இது கடினமான தொன்றாகும்.

(அல் பக்கரா: 46)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நற்பேறு இழந்த மற்றும் கண் பார்வையற்ற எதிரி விரும்பியதைக் கூறிக் கொள்ளட்டும்! நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட பணியை செய்திருக்கின்றார்கள் என்றால் அதனை தனித்தனியாகவோ அல்லது ஒன்றிணைந்தோ கூட எவராலும் செய்ய முடியாது மேலும் இது அல்லாஹ்வின் அருளாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றி அன்னார் (ஸல்) சிலை வணாங்கிகளிடமிருந்து இரட்சிப்பு வழங்கியதற்கு அல்லாஹ்விற்கு எல்லையற்ற நன்றிகள். இந்த நன்மைகளுக்கு கூலியாக

اِنَّ اللّٰهَ وَ مَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَ سَلِّمُوْا تَسْلِيْمًا

(அல் அஹ்ஸாப் : 57) என்ற இந்த அந்தஸ்து இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே கிடைத்ததன் இரகசியம் இதுவே ஆகும்.

கம்பீரமும் கண்ணியமும் மிக்க அல்லாஹ் கருணை புரிய விரும்பியபோது முஹம்மது (ஸல்) அவர்களை படைத்தான். அன்னாரின் பெயர் முஹம்மது (ஸல்) என்பதாக இருந்தது. அதன் பொருள் மிகவும் புகழப்பட்டவர் என்பதாகும். அந்த சொல் தஃப்யீல் என்ற பாபிலிருந்து தோன்றியுள்ளது. அதற்கான காரணம் இதுவாகும். அதாவது ஒருவர் எந்த அளவிற்கு பணி செய்கின்றாரோ அதே அளவிற்கே அவர் புகழுக்குரியவராக இருக்கின்றார். முந்தைய நபிமார்கள் குறிப்பிட்ட சமுதாயங்களுக்காகவே வந்து கொண்டிருந்தனர். மேலும், அப்போது ஒரு மகத்தான சீர்திருத்தத்திற்கான தேவை இல்லாமல் இருந்தது.

நீங்கள் சீர்தூக்கி சிந்தித்துக் கொண்டே சென்றால் எந்த நபியும் இந்த அருளுக்குரிய பெயருக்கு உரிமை படைத்தவராக இருக்கவில்லை என்பது தெரிய வரும். எதுவரை என்றால் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் வந்தது. அது ஒரு முற்கள் நிறைந்த காடாக இருந்தது. அதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடியெடுத்து வைத்தார்கள். மேலும் அப்போது இருள் உச்சத்தை

இதன் தொடர்ச்சி ...9-ம் பக்கம் காண்க

## அல்லாஹ் எல்லாவற்றையும் பார்க்கும்போதும், ஒவ்வொரு நபரின் குரலையும் கேட்கும்போதும் பின்னர் அவனுக்கு வேறொரு இறை உதவியாளருக்கு என்ன தேவை இருக்கின்றது? தனித்தவனாகவே முழு உலகின் மீதும் மேலோங்கி இருக்கின்றான்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ், வசனம் 68-ற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

எந்த மக்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நிராகரிக்கின்றார்களோ அவர்கள் ஒருபோதும் இறைப் பண்புகளை முழுமையாக அனுமானிக்கவில்லை. அவர்களின் தடுமாற்றத்திற்கு இதுவே காரணமாக இருக்கின்றது. ஆக, பாருங்கள்; எந்த மக்கள் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்வதில்லையோ அல்லது எவர்கள் வேறு சில காரணிகளை இடையில் கொண்டு வர விரும்புகின்றனரோ அத்தகைய மக்களின் கொள்கை இந்த விஷயத்தை அடித்தளமாக கொண்டிருக்கின்றது. அதாவது முழு உலகத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்ற மற்றும் அனைத்து மக்களின் குரலை கேட்டுக் கொண்டிருக்கக் கூடிய ஓர் இருப்பு இருக்கின்றது என்பதை அவர்களின் மூளை ஒப்புக் கொள்வதில்லை. இடையில் சில ஊடகங்களின் தேவை இருக்கின்றது என்று அவர்கள் கருதுகின்றனர். அவர்களுக்கு மத்தியில் இறை ஆற்றல்கள் பங்கிடப்பட்டிருப்பதாகவும், அவர்கள் தம்தமது இடத்தில் அந்த ஆற்றல்களை பயன்படுத்துகின்றனர் என்றும் அவர்கள் எண்ணுகின்றனர். இந்த ஏமாற்றத்திற்கான பெரும் காரணம் இதுவேயாகும். அதாவது இத்தகைய மக்கள் இறைவனின் ஆற்றல்களை தங்களது ஆற்றல்களை அடிப்படையாகக் கொண்டு அனுமானித்துள்ளனர். மேலும் இறைப் பண்புகளை மனித ஆற்றல்களிலிருந்து கற்பனை செய்து கொண்டு விட்டனர். மனித்ன் ஒரு பக்கம் பார்க்கும் போது பின்னர் மற்றொரு பக்கத்திலிருக்கும் பொருள் அவனுக்கு தென்படுவதில்லை என்பதை அவர்கள் கண்டனர். எனவே அல்லாஹ்வின் பார்வையும் எல்லைக்குட்பட்டதாகும் என்று அவர்கள் கருதி விட்டனர். (தஃப்ஸீரேகபீர் தொகுதி6, பக்கம் 97)

## நபிமொழி

**சிறைபிடிக்கப்பட்ட விலங்கு மரணித்துவிட்டால் கிடைக்கும் தண்டனை**

(2365) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு பெண்ணிற்கு பூனையின் காரணமாக தண்டனை வழங்கப்பட்டது. அந்தப் பூனையை அந்தப் பெண்மணி அடைத்து வைத்திருந்தார். எதுவரை என்றால், அது பசியினால் செத்து விட்டது. எனவே அவர் அந்தப் பூனையின் காரணமாக நெருப்பில் நுழைந்தார். அன்னார் (ஸல்) இவ்வாறும் கூறினார்கள்: (அவளிடம் இவ்வாறு கூறப்பட்டது) நீ இதனை அடைத்து வைத்திருந்தாய்; மேலும் அல்லாஹ்வே நன்கறிவான். நீ அதற்கு தீனியும் கொடுக்கவில்லை ; தண்ணீரும் கொடுக்கவில்லை. அது பூமியில் உள்ள புழுக்களையும், பூச்சிகளையும் தின்று (பிழைத்துக்) கொள்ளும் வகையில் அதனை நீ அவிழ்த்து விடவும் இல்லை என்று அவளிடம் அல்லாஹ் கூறினான்.

**மூன்று நபர்களின் பக்கம் அல்லாஹ் கியாமத் நாளன்று பரிவுடன் பார்க்க மாட்டான்**

(2369) ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூன்று நபர்கள் இருக்கின்றனர்; அவர்களுடன் அல்லாஹ் கியாமத் நாளன்று பேசவும் மாட்டான்; அவர்களின் பக்கம் பரிவுடன் பார்க்கவும் மாட்டான். ஒருவன், தன் பொருளை (அதிக விலைக்கு விற்பதற்காக அதைக் கொள்முதல் செய்தபோது) வாடிக்கையாளர் கொடுக்கும் விலையை விட அதிக விலை கொடுத்து வாங்கியதாக (பொய்) சத்தியம் செய்தவன் ஆவான். மற்றொருவன், அஸர் தொழுகைக்குப் பிறகு (மக்கள் கூடும் நேரத்தில்) முஸ்லிம் ஒருவரின் செல்வத்தை அபகரித்துக் கொள்வதற்காகப் பொய் சத்தியம் செய்தவன் ஆவான். மற்றொருவன், தன் சேவைக்கு மேல் எஞ்சியிருந்த நீரை (மக்கள் உபயோகிப்பதைத்) தடுத்தவன் ஆவான். (மறுமையில்) அவனை நோக்கி உன் கரங்கள் உருவாக்காத தண்ணீரின் மீதத்தை மக்கள் உபயோகிக்க விடாமல் தடுத்ததைப் போன்றே இன்று நானும் என்னுடைய அருளிலிருந்து உன்னைத் தடுக்கின்றேன் என்று அல்லாஹ் கூறுவான்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, பாடம் (முஸாகாத், காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு)

* * * * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஸைர் பின் ரிஸ்ஸாமை நோக்கி அனுப்பப்பட்ட அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களின் போர்ப் படை மற்றும் அம்ர் பின் உமைய்யா ஸம்ரீ அவர்களின் போர்ப் படை ஆகியவற்றின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

முஹம்மது (ஸல்) அவர்களே! நான் மக்களிடம் அஞ்சியதில்லை. ஆனால், நான் ஹுஸுர் (ஸல்) அவர்களைக் கண்டபோது, எனது அறிவு போய் விட்டது. எனது உள்ளம் வலுவிழந்து விட்டது. பிறகு நான் எனது உறுதியான எண்ணமாக இருந்த அந்த எண்ணத்தை அறிந்தேன். பயண விலங்கில் வந்த பலர் அது தொடர்பாக முயற்சி செய்து விட்டார்கள். ஆனால், எவரும் வெற்றி பெறவில்லை. தாங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளீர்கள் என்றும், நிச்சயமாக தாங்கள் உண்மையில் உள்ளீர்கள்! என்றும் நான் அறிந்து கொண்டேன். அதாவது அல்லாஹ் தங்களைப் பாதுகாக்கின்றான். மேலும், அபூ ஸுஃப்யானின் படை ஷைத்தானின் படையாகும் ( ஒரு தாக்குதல் நடத்தியவரின் வாக்குமூலம்)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அமர் பின் உமைய்யாவையும் ஸலமா பின் அஸ்லமையும் அபூஸுஃப்யான் பின் ஹர்பை நோக்கி அனுப்பினார்கள். மேலும், நீங்கள் இருவரும் அவரை கவனமற்ற நிலையில் கண்டால் அவரை கொன்று விடுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்

மதிப்பிற்குரிய ஷேக் முபாரக் அஹ்மது ஸாஹிப் (நாஸிர் தீவான், ரப்வா), மதிப்பிற்குரிய முஹம்மது முனீர் அத்லபீ மற்றும் மதிப்பிற்குரிய அப்துல் பாரீ தாரிக் ஸாஹிப் (ரப்வா) ஆகியோரின் நற்குறிப்புகளும் காயிப் ஜனாஸா தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஜனவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **17 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்று எடுத்துரைக்கப்படவிருக்கும் போர்ப் படையெடுப்புகளில் ஒன்று உஸைர் பின் ரிஸ்ஸாமை நோக்கி அனுப்பப்பட்ட அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களுடைய போர்ப் படையாகும். அதைப் பற்றி முதலில் கூறப்படும். அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களின் இந்தப் போர்ப் படை ஷவ்வால் ஹிஜ்ரீ 6-ஆம் ஆண்டு உஸைர் அல்லது உஸைர் பின் ரிஸ்ஸாமை நோக்கி ஃஹைபருக்கு அனுப்பப்பட்டது.

இதன் விபரத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அபூ ராஃபி ஸலாம் பின் அபீ ஹுகைக் கொல்லப்பட்டபோது, யூதர்கள் உஸைர் பின் ரிஸ்ஸாமைத் தங்கள் அமீராக நியமித்தார்கள். அவன் யூதர்கள் முன் நின்று இவ்வாறு உரையாற்றினான்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் யூதர்களில் எவர்கள் பக்கம் சென்றாலும் அல்லது தம் தோழர்களில் யாரையாவது அனுப்பினாலும் (தாம்) எந்த விஷயத்தில் எண்ணம் கொண்டார்களோ அதில் வெற்றி பெற்றுள்ளார்கள். ஆனால், என் நண்பர்களில் எவரும் செய்திடாத செயலை நான் செய்வேன்.

யூதர்கள் அவனிடம், நீ என்ன செய்யப் போகிறாய்? என்று கேட்டனர். உஸைர் பின் ரிஸ்ஸாம் கூறினான்: நான் ஃகத்ஃபான் கோத்திரத்திடம் செல்கிறேன். அவர்களை ஒன்று திரட்டுகிறேன். நாம் முஹம்மது (ஸல்) அவர்களை நோக்கி சென்று அவர்களது வீட்டிற்குள் நுழைந்து விடுவோம். எப்பொழுது ஒருவர் தன் எதிரியின் வீட்டுக்கு சென்று தாக்குதல் தொடுக்கிறாரோ அப்பொழுது அவர் தனது நோக்கத்தில் ஓரளவு வெற்றியே பெற்று விடுகின்றார்.

உனது சிந்தனை மிகவும் நல்லது என்று யூதர்கள் கூறினர். எனவே அவன் ஃகத்ஃபான் கோத்திரம் மற்றும் பிற கோத்திரங்களை நோக்கி சென்று விட்டான். அவர்களை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராகப் போர் புரிய ஒன்று திரட்ட ஆரம்பித்தான். இந்த செய்தி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை எட்டி விட்டது. எனவே ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த செய்தியின் உண்மைத் தன்மையினைத் தெளிவுபடுத்துவதற்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை மூன்று நபர்களுடன் ரமலான் மாதத்தில் இரகசியமாக அனுப்பி வைத்தார்கள். (ஸுபுலுல் ஹுதா,தொகுதி 6, பக்கம் 111,தாருல் குதுபில் இல்மியா)

இதன் விபரத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

இந்த நிலைமைகள் பற்றி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தகவல் கிடைத்தபோது, அன்னார் (ஸல்) உடனடியாக அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) எனும் தம் அன்ஸாரி ஸஹாபி ஒருவரை மற்ற மூன்று ஸஹாபிகளுடன் ஃஹைபரை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும், மறைந்து, மறைந்து செல்லுங்கள்; எல்லா நிலைமைகளையும் அறிந்து கொண்டு விரைவாகத் திரும்பி வந்து விடுங்கள் என்று அவர்களுக்கு, வலியுறுத்திக் கூறினார்கள்.

எனவே அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் சென்றார்கள். இரகசியமாக எல்லா நிலைமைகளையும், விபரங்களையும் அறிந்து கொண்டும், இந்த செய்திகள் சரியானவைதான் என்பதை உறுதிபடுத்திக் கொண்டும் திரும்பி வந்து விட்டார்கள். அதையும் தாண்டி, அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் எப்படிப்பட்ட புத்திக் கூர்மையுடன் செயல்பட்டார்கள் என்றால், ஃஹைபரின் கோட்டைகளின் அக்கம் பக்கம் சுற்றித் திரிந்து, உஸைர் பின் ரிஸ்ஸாமின் சபைகள் இருக்கும் இடங்களை அடைந்து, உஸைர் மற்றும் அவனுடைய கூட்டாளிகள் வாயாலேயே அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக இன்ன இன்ன திட்டங்களைத் தீட்டுகின்றார்கள் என்பதைக் கேட்டறிந்தார்கள்.

அந்த நாட்களிலேயே ஃஹாரிஜா பின் ஹுஸைஸ் எனும் முஸ்லிம் அல்லாத ஒரு நபர் தற்செயலாக ஃஹைபரிலிருந்து மதீனாவுக்கு வந்தார். அவரும் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை உண்மைப்படுத்தினார். அவர் இவ்வாறு கூறினார்: உஸைர் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக தன்னுடைய படைகளைத் திரட்டிக் கொண்டிருந்த நிலையில் நான் அவனிடமிருந்து வந்தேன்.

இந்த உறுதிப்படுத்தலுக்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களது தலைமையில் 30 ஸஹாபிகளைக் கொண்ட ஒரு குழுவை ஃஹைபரை நோக்கி அனுப்பி வைத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் குழுவுக்கு என்ன வழிகாட்டல்கள் வழங்கி அனுப்பி வைத்தார்கள் என்பது அறிவிப்புகளிலிருந்து தெரிய வருவதில்லை. ஆனால், ஃஹைபரில் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களுக்கும் உஸைர் பின் ரிஸ்ஸாமுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலிலிருந்து வெளிப்படுத்துவதாவது, உஸைரை மதீனாவுக்கு வரவழைத்து, இந்தக் குழப்பத்தைத் தூண்டுவது நின்றுவிடும் வகையிலான, நாட்டில் அமைதி மற்றும் சமாதான சூழல் உருவாகி விடும் வகையிலான ஓர் உடன்பாட்டை அவனுடன் செய்து கொள்ள வேண்டும் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோக்கமாக இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் உஸைர் இனிமேல் முஸ்லிம்களுக்கு எதிராக தனது

குழப்பத்தைத் தூண்டும் செயலிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவனை ஃகைபர் பகுதியின் அமீராக ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு இந்த விருப்பத்தில் ஆயத்தமாக இருந்தார்கள்.

அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களின் குழு ஃகைபரை அடைந்தபோது, எல்லாவற்றிற்கும் முதலாக அவர்கள் உஸைர் பின் ரிஸ்ஸாமிடம் பேச்சுவார்த்தையின்போது அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான உறுதிமொழியை வாங்கிக் கொண்டார்கள். இதிலிருந்து தெரியவருவதாவது, அந்த நேரம் ஆபத்து எவ்வளவு அதிகமாகி விட்டிருந்தது என்றால், இந்தப் பேச்சுவார்த்தைக்கு நடுவிலேயே உஸைர் தரப்பலிருந்து ஏதாவது நம்பிக்கை துரோகமான சூழ்நிலை உருவாகி விடப்போகிறது என்பதை முஸ்லிம்கள் புரிந்திருந்தார்கள்.

அப்படி நடக்காது என்று உஸைர் உறுதியளித்தான். ஆனால், அத்துடன் தனது மரியாதை நிமித்தமாக, அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களிடமிருந்து, அவர்களும் எந்த இழப்பும் ஏற்படுத்தக் கூடாது என்று இதே போன்ற உறுதியை வாங்கிக் கொண்டான். ஆனால், அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் சார்பாக இந்த விஷயத்தில் முந்திக் கொண்டது. உண்மையான ஆபத்து யார் தரப்பலிருந்து இருந்தது? என்பதை வெளிப்படுத்துகிறது.

எவ்வாறாயினும், இந்தப் பேச்சுகளுக்கும், ஒப்புதல்களுக்கும் பிறகு, அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் உஸைருடன் உரையாடத் துவங்கினார்கள். அதன் கருத்து இதுவாகும். ஒருவர் மற்றவருடனான இந்தப் போர் நின்று விடுவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உன்னுடன் ஒரு அமைதி மற்றும் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள விரும்புகிறார்கள்; அதற்கான சிறந்த வழிமுறையாவது, நீயே மதீனாவுக்கு வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நேரில் பேசு; இது போன்ற ஓர் உடன்படிக்கை ஆகிவிட்டால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உன்னுடன் கருணையுடன் நடந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். மேலும் உன்னை முறையாக ஃகைபரின் தலைவனாகவும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சாத்தியமும் உள்ளது.

பதவிக்குப் பெரிதும் ஆசைப்பட்டு வந்த உஸைருக்கு, அல்லது அவனது மனதில் வேறு ஏதாவது எண்ணம் மறைவாக இருந்திருக்கலாம். அவனுக்கு இந்த முன்மொழிவு பிடித்து விட்டது. குறைந்தபட்சம், எனக்கு இந்த முன்மொழிவு பிடித்து விட்டது என்று அவன் வெளிப்படுத்தவாவது செய்தான். ஆனால், அத்துடன் அவன் ஃகைபரின் யூதத் தலைவர்களை ஒன்று திரட்டி அவர்களிடம், முஸ்லிம்கள் தரப்பிலிருந்து இந்த முன்மொழிவு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக என்ன செய்யலாம்? என்று ஆலோசனை கேட்டான்.

இஸ்லாத்திற்கு எதிராக பொதுவிரோதத்தில் குருடாகிக் கொண்டிருந்த யூதர்கள் பொதுவாக இந்த முன்மொழிவை எதிர்த்தார்கள். மேலும் உஸைரை இந்த எண்ணத்திலிருந்து விலக்கி வைக்கும் நோக்கத்தில், முஹம்மது (ஸல்) அவர்கள் உன்னை ஃகைபரின் அமீராக ஏற்றுக் கொள்வார்கள் என்று எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறினர். ஆனால், நிலைமையை அதிகம் அறிந்திருந்த உஸைர் தனது கூற்றில் நிலைத்திருந்தான். மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் இந்தப் போரால் நொந்து போய் இருக்கிறார்; மேலும் எப்படியாவது இந்தப் போர்த் தொடர் நின்று விட வேண்டும் என்று மனதால் விரும்புகிறார் என்று கூறினான்.

ஆக, அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களின் குழுவினருடன் மதீனாவுக்கு செல்ல உஸைர் பின் ரிஸ்ஸாம் ஆயத்தமாகி விட்டான். அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களைப் போன்று அவனும் தன்னுடன் யூதர்கள் முப்பது பேரை அழைத்துக் கொண்டான். இவ்விரு குழுக்களும், ஃகைபரிலிருந்து புறப்பட்டு, ஃகைபரிலிருந்து 6 மைல் தொலைவில் இருந்த கர்கரா எனும் இடத்தை அடைந்தன. அப்பொழுது உஸைரின் நிய்யத் மாறி விட்டது.

அல்லது அவனது நிய்யத் ஏற்கனவே மோசமாகத் தான் இருந்தது என்றால், அது வெளிப்படுவதற்கான நேரம் வந்து விட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும். ஆக, அவன் பேசிக் கொண்டே மிகவும் சாதுர்யமாக முஸ்லிம்களின் குழுவின் ஒரு கண்ணியத்திற்குரிய நபரான அப்துல்லாஹ் பின் உனைஸ் அன்ஸாரி (ரலி) அவர்களின் வாளின் பக்கம் கையைக் கொண்டு சென்றான். அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் இந்தப் பேறிழந்தவனின் கோட்பாடு மாறிவிட்டது என்பதை உடனடியாக அறிந்து கொண்டார்கள்.

எனவே அவர்கள் உடனடியாக தமது ஒட்டகத்தின் சேணத்தைக் குதிகால்களால் இழுத்து அதை முன்னால் கொண்டு வந்து விட்டு, உஸைர் பக்கம் திரும்பி, இறைவனின் பகைவனே! நீ எங்களுடன் நம்பிக்கைத் துரோகம் செய்ய விரும்புகிறாயா? என்று குரல் கொடுத்தார்கள். அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்கள் இருமுறை இந்த சொற்களைக் கூறினார்கள். ஆனால், உஸைர் எந்த பதிலும் அளிக்கவில்லை. அவன் தான் குற்றமற்றவன் என்றும் எதுவும் கூறவில்லை.மாறாக, அவன் முன்னாலிருந்து சண்டையிட ஆயத்தமாக இருந்தான்.

இது அநேகமாக இத்தகைய தருணம் வந்தால், எல்லாரும் சேர்ந்து முஸ்லிம்கள் மீது பாய்ந்து விடுங்கள் என்று யூதர்களிடம் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட ஒரு சைகையாக இருந்தது. ஆக, அந்த இடத்திலேயே சரியாக வழிப்பாதையில் முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும் இடையில் வாள் வீசப்பட்டது. போர் துவங்கிவிட்டது. ஒரு வகையில், இரண்டு குழுக்களும் எண்ணிக்கையில் சரிசமமாக இருந்தன. யூதர்கள் ஏற்கனவே மனரீதியாக ஆயத்தமாக இருந்தனர். முஸ்லிம்கள் முற்றிலும் எண்ணமே கொள்ளாமல் இருந்தனர். போர் புரிவதற்கான எந்த எண்ணமும் அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனால்,இறைவன் எப்படி அருள் புரிந்தான் என்றால் முஸ்லிம்கள் சிலர் காயமடைந்தார்கள்; எனினும், அவர்களில் எவருக்கும் உயிரழப்பு ஏற்படவில்லை. ஆனால், மறுபுறம் யூதர்கள் அனைவரும் தமது நம்பிக்கை துரோகத்திற்கான பலனை சுவைத்தவாறு மண்ணில் கலந்து விட்டார்கள்.




ஸஹாபிகளின் இந்தக் குழு மதீனாவுக்குத் திரும்பி வந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நிலைமைகள் பற்றித் தெரிய வந்ததும், பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்கள் நலமுடன் தப்பித்துக் கொண்டதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். மேலும் கூறினார்கள்:

قَدْ نَجَّاكُمُ اللهُ مِنَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ

பொருள்: இறைவன் உங்களை அந்த அநீதியிழைக்கும் குழுவிடமிருந்து காப்பாற்றியதற்காக நன்றி செலுத்துங்கள்.

இந்த நிகழ்வு தொடர்பாக கிறிஸ்தவ வரலாற்றாசிரியர்கள் சிலர் ஒருவகையில் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களின் குழு உஸைர் ஆகியோரை, வழியில் சந்தர்ப்பம் பார்த்து அவர்களைக் கொன்று விடும் எண்ணத்தில்தான் ஃகைபரிலிருந்து வெளியே அழைத்துக் கொண்டு வந்தனர் என்று ஆட்சேபனை செய்துள்ளார்கள்.

ஆனால், இந்த ஆட்சேபனை மேற்கத்தியவர்களின் வலுக்கட்டாயமான திணிப்பிற்கான ஒரு அருவருப்பான வெளிப்பாடு என்பதைத் தவிர எந்த உண்மைத்துவத்தையும் கொண்டிருப்பதில்லை. இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்கள் என்ன வேண்டுமானாலும் அவர்கள் மனதில் வருவதை கூறிவிடுகின்றார்கள். ஏனெனில், மேலே எடுத்துக் கூறப்பட்டது போன்று, முஸ்லிம்கள் இந்த எண்ணத்தில் அங்கு சென்றார்கள் என்பதற்கு வரலாற்றில் எந்த சான்றும் கிடைப்பதில்லை. மாறாக, ஆழ்ந்து கவனம் செலுத்தினால் மற்ற சான்றுகள் ஒருபுறம் இருக்கட்டும்;. இறைவனின் எதிரியே! நம்பிக்கை துரோகம் செய்யப் பார்க்கிறாயா? என்ற அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களின் இந்தச் சொற்கள் இருக்கின்றன.

அடுத்து இறைவன் உங்களை அந்த அநீதியிழைக்கும் குழுவிடமிருந்து காப்பாற்றியதற்கு நன்றி செலுத்துங்கள் என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் இந்தச் சொற்கள் இருக்கின்றன. இவை மட்டுமே முஸ்லிம்களின் எண்ணம் முற்றிலும் தூயதாகவும், அமைதி நிறைந்ததாகவும் இருந்தது என்பதை நிரூபிப்பதற்கு போதுமானவையாகும். என்ன நடந்ததோ? அது யூதர்கள் தமது வழக்கப்படி முஸ்லிம்களுடன் செய்ய நினைத்த நம்பிக்கை துரோகத்தின் விளைவாக இருந்தது. ஆனால், அதை இறைவன் தனதருளால் அவர்கள் மீதே திருப்பி விட்டான். எவ்வாறாயினும், இது இந்தப் போர்ப் படையின் முடிவாக அமைந்தது.

பிறகு, அம்ர் பின் உமைய்யா ஸம்ரீயின் போர்ப் படையாகும். இது அபூ ஸுஃப்யானை நோக்கிச் சென்றது. இப்னு ஹிஷ்ஷாம், இப்னு கஸீர் மற்றும் தபரீ போன்றோர் இந்தப் போர்ப் படையை ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு தொடர்பாக ரஜீஃ சம்பவத்துக்குப் பிறகுள்ளதாக எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால், இப்னு ஸஃது அவர்கள் இந்த போர்ப் படையை ஹிஜ்ரீ 6-ம் ஆண்டின் போர்ப் படைகளின் கீழ் எடுத்துரைத்துள்ளார்கள். ஸர்க்கானீ

அவர்களும் இப்னு ஸஃது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கியவாறு ஹிஜ்ரீ 6-ம் ஆண்டின் கீழ் இந்தப் போர்ப் படையை எடுத்துரைத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இந்தப் போர்ப் படையை ஹிஜ்ரீ 6-ம் ஆண்டில் எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் அதன் விபரத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: இந்தப் போர்ப் படையின் தேதி குறித்து வரலாற்றாசிரியர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு உள்ளது. இப்னு ஹிஷ்ஷாம் மற்றும் தபரீ ஆகியோர் இதை ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு நிகழ்ந்ததாக எடுத்துரைக்கின்றார்கள். ஆனால், இப்னு ஸஃது அவர்கள் இதை ஹிஜ்ரீ 6-ம் ஆண்டில் எழுதியுள்ளார்கள். அல்லாமா கஸ்தலானீ மற்றும் ஸர்க்கானீ ஆகியோர் இப்னு ஸஃதின் அறிவிப்புக்கு முன்னுரிமை அளித்துள்ளார்கள். எனவே எழுதுகிறார்கள்: நானும் இதை ஹிஜ்ரீ 6-ம் ஆண்டில் எடுத்துரைத்துள்ளேன். வல்லாஹு அஃலமு (அல்லாஹ்வே நன்கறிவான்).

இப்னு ஸஃது அவர்களின் அறிவிப்பின் கருத்தை பைஹக்கீ அவர்களும் ஆமோதித்துள்ளார்கள். ஆனால், இதில் இந்த நிகழ்வின் காலம் பற்றி தெரிவதில்லை. இந்தப் போர்ப் படையின் விபரம் இவ்வாறு வருகிறது: அபூ ஸுஃப்யான் குறைஷிய மக்கள் சிலரிடம், உங்களில் முஹம்மது (ஸல்) அவர்களை அவர்கள் சந்தைகளில் சென்று கொண்டிருக்கும் போது திடீரெனக் கொன்று விடுபவர் எவரும் இல்லையா? என்று கேட்டார்.

ஆக, அபூ ஸுஃப்யானிடம் காட்டரபிகளில் ஒரு மனிதர் அவர் விட்டுக்கு வந்தான். மேலும் அவன் கூறினான்: நீ என்னை மக்களில் எல்லாரையும் விடவும் அதிகம் வலுவான உள்ளம் கொண்டவராகக் காணப் பெறுவாய்; அவர்களை விட எனது பிடி அதிகம் கடுமையானது; என்னால் எல்லாரையும் விட வேகமாக ஓட முடியும்; நீ எனக்கு உதவி செய்தால், நான் அவர்கள் பக்கம் செல்வேன்; எதுவரை என்றால், நான் திடீரென்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடுவேன்; என்னிடம் ஒரு கத்தி இருக்கின்றது; அது கழுகின் இறக்கையைப் போன்றது; அதைக் கொண்டு நான் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பேன்; பிறகு, நான் ஏதாவது ஒரு கூட்டத்துக்குள் கலந்து விடுவேன்; ஓடிச் சென்று அந்த சமுதாயத்தை விட்டு முன்னால் சென்று விடுவேன்; ஏனெனில், நான் வழிப்பாதைகளை அறிவதில் கைதேர்ந்தவன் ஆவேன்.

நீயே எங்கள் கூட்டாளி ஆவாய் என்று அபூ ஸுஃப்யான் கூறினார். எனவே அபூ ஸுஃப்யான் அவருக்கு ஒட்டகத்தையும், பயணத்துக்குத் தேவையானவற்றையும் கொடுத்தார். உனது வேலையை இரகசியமாக செய்! என்று கூறினார். அந்த நபர் இரவில் புறப்பட்டார். தனது பயண விலங்கில் 5 நாள் சென்று கொண்டிருந்தார். 6-ம் நாள் காலை அவர் ஹர்ரஹ்வை சென்றடைந்தார். கருப்பு நிற கற்கள் நிறைந்த பகுதி ஹர்ரஹ் எனப்படுகிறது. மதீனா இரண்டு ஹர்ரஹ்களுக்கு நடுவில் இருந்தது.

ஒன்று கிழக்கு ஹர்ரஹ் மற்றொன்று மேற்கு ஹர்ரஹ்.

எவ்வாறாயினும், அவர் மக்கள் பக்கம் திரும்பினார். மதீனா சென்றடைந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறித்து விசாரிக்கத் துவங்கினார். எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி அவருக்குக் கூறப்பட்டது. எனவே அவர் தனது பயண விலங்கைக் கட்டி வைத்து விட்டு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ அப்தில் அஷ்ஹல் பள்ளிவாசலில் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரைப் பார்த்ததும், நிச்சயமாக இந்த மனிதனுக்கு ஏமாற்றும் எண்ணம் உள்ளது என்று கூறினார்கள்.

அவரது நிலையை வைத்து அடையாளம் கண்டு கொண்டார்கள். மேலும், கூறினார்கள்: அல்லாஹ் அவருக்கும் அவரது எண்ணத்திற்கும் நடுவில் இடைப்பட்டுள்ளான். ஆக, அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கச் சென்றார். அப்பொழுது உஸைது பின் ஹுஸைர் (ரலி) அவரை அவரது போர்வையின் உட்புற முனை வழியாகப் பிடித்து விட்ட போது, என் இரத்தம் என் இரத்தம் என்று அவர் கத்தினார். அதாவது எனக்கு உயிர்ப்பிச்சை போடுங்கள் என்றார்; பிடிபட்டார்.

ஹஸ்ரத் உஸைது (ரலி) அவர்கள் அவரை கழுத்தில் பிடித்தார்கள். பிறகு விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், நீ யார்? என்று எனக்கு உண்மையைக் கூறு! என்று கூறினார்கள். அதற்கு, அவர் நான் உயிருக்கு உத்திரவாதம் வேண்டுகிறேன் என்று கேட்டார். ஹுஸூர் (ஸல்) அவர்கள், ஆகட்டும்! என்று கூறினார்கள். அவர் தன் வேலையையும் அபூ ஸுஃப்யான் அவருக்காக நிர்ணயித்ததையும் கூறினார். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை விட்டு விட்டார்கள். இந்தப் பரிவினால் அவர் முஸ்லிம் ஆகிவிட்டார். அவர் இவ்வாறு கூறினார்:

முஹம்மது (ஸல்) அவர்களே! நான் மக்களிடம் அஞ்சியதில்லை. ஆனால், நான் ஹுஸூர் (ஸல்) அவர்களைக் கண்டபோது, எனது அறிவு போய் விட்டது. எனது உள்ளம் வலுவிழந்து விட்டது. பிறகு நான் எனது உறுதியான எண்ணமாக இருந்த அந்த எண்ணத்தை அறிந்தேன். பயண விலங்கில் வந்த பலர் அது தொடர்பாக முயற்சி செய்து விட்டார்கள். ஆனால், எவரும் வெற்றி பெறவில்லை. தாங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளீர்கள் என்றும், நிச்சயமாக தாங்கள் உண்மையில் உள்ளீர்கள்! என்றும் நான் அறிந்து கொண்டேன். அதாவது அல்லாஹ் தங்களைப் பாதுகாக்கின்றான். மேலும், அபூ ஸுஃப்யானின் படை ஷைத்தானின் படையாகும்.

அதைக் கேட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புன்சிரித்தார்கள். பிறகு, அந்த மனிதர் சில நாட்கள் (மதீனாவில்) தங்கியிருந்த பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்று சென்றுவிட்டார். அதற்குப் பிறகு, அந்த மனிதரைப் பற்றிய எந்தக் குறிப்பும் கேட்கக் கிடைக்கவில்லை. வரலாற்றில் பிறகு, அவரைப் பற்றிய குறிப்பு வருவதில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்ர் பின் உமைய்யா அவர்களையும் ஸலமா பின் அஸ்லம் அவர்களையும் அபூ ஸுஃப்யான் பின் ஹர்பை நோக்கி அனுப்பினார்கள். மேலும், இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் இருவரும் அவனை கவனமற்றவனாகக் கண்டால், அவனைக் கொன்று விடுங்கள். அவன் இப்படி எண்ணம் வைத்திருக்கிறான் என்றால் சரி; இந்த சண்டை முடிவுக்கு வருவதற்கு அவனை முடித்து விடுவதுதான் அதற்கான சிகிச்சையாகும்.

இப்னு ஹிஷ்ஷாம் அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்களுடன் ஜப்பார் பின் ஸஃஹர் அன்ஸாரியை அனுப்பினார்கள். ஆக, இவ்விருவரும் அங்கிருந்து புறப்பட்டார்கள். எதுவரை என்றால், மக்காவுக்கு அருகில் சென்றடைந்தார்கள். அவர்கள் இருவரும் தம்முடைய இரு ஒட்டகங்களையும் யஃஜிஜின் புதர்களில் ஒரு புதரில் ஒளித்து வைத்து விட்டார்கள். அது மக்காவிலிருந்து 8 மைல் தொலைவில் இருந்தது. பிறகு இரவில் மக்காவுக்குள் நுழைந்தார்கள்.

ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸலமா (ரலி) அவர்கள் அம்ர் அவர்களிடம், நாம் பைத்துல்லாஹ்வை வலம் வந்தால், இரண்டு ரக்அத்துகள் தொழுதால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். அம்ர் கூறினார்கள்: இந்த மக்கள் இரவு உணவு உண்டதும், தமது திண்ணைகளில் உட்கார்ந்து கொள்வார்கள். அவர்களுக்கு என்னை அடையாளம் தெரியும். அம்ரின் தோழர் கூறினார்கள்: ஒருபோதும் இல்லை. நாம் செல்வோம். இன்ஷா அல்லாஹ்.

அம்ர் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்: அவர் என் பேச்சைக் கேட்க மறுத்து விட்டார். பிறகு நாங்கள் பைத்துல்லாஹ்வை வலம் வந்தோம்; தொழுதோம்; சென்று விட்டோம். பிறகு கூறுகிறார்கள்: நாங்கள் அபூ ஸுஃப்யானை நோக்கி செல்வதற்கான எண்ணத்துடன் சென்றோம். வந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் மக்காவில் சென்று கொண்டிருந்தோம். திடீரென்று மக்கத்தினரில் என்னைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்ட ஒரு மனிதர் முஆவியா பின் அபீ ஸுஃப்யான் ஆவார்.

ஆக, முஆவியா கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அம்ர் பின் உமைய்யா ஏதோ தீங்கிழைப்பதற்காகவே வந்திருக்கிறார். அவர் குறைஷியர்களுக்கு தெரியப்படுத்தி விட்டார். எனவே அவர்கள் அம்ர் மீது அச்சமடைந்தார்கள். அதாவது குறைஷியர்களுக்குத் தெரிய வந்தபோது, அவர்கள் பயந்து போனார்கள். மேலும் தேடுவதற்காகப் புறப்பட்டார்கள். அம்ர் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் என் தோழரிடம், வேகமாக விரைந்து செல்லுங்கள் என்று கூறினேன். எனவே நாங்கள் புறப்பட்டு வேகமாக ஓடத் துவங்கினோம். எதுவரை என்றால், நாங்கள் ஒரு மலை மீது ஏறிவிட்டோம். அவர்கள் எங்களைத் தேடிப் புறப்பட்டார்கள். நாங்கள் மலை மீது ஏறிவிட்டிருந்தோம். அவர்கள் (எங்களைப் பிடிக்க முடியாமல்) நம்பிக்கையிழந்து விட்டார்கள். எனவே நாங்கள் திரும்பி வந்தோம். மலையின் ஒரு குகையில் நுழைந்து விட்டோம். நாங்கள் அதில் இரவைக் கழித்தோம். நாங்கள்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

கற்களை எடுத்து எங்களைச் சுற்றி வரிசையாக இணைத்து வைத்தோம். பொழுது விடிந்ததும், குறைஷியர்களின் ஒரு மனிதன் எங்களிடம் வந்தான்.

அங்கு பார்த்தார்கள். ஒரு குறைஷிய நபர் சுற்றித் திரிந்து கொண்டிருந்தான். இப்னு ஸஃது அவர்களின் பார்வையில் அவன் உபைதில்லாஹ் பின் மாலிக் பின் உபைதில்லாஹ் தைமீ ஆவான்.

எவ்வாறாயினும், ஆனால் இப்னு இஸ்ஹாக் அவர்களின் பார்வையில் அவன் உஸ்மான் பின் மாலிக் பின் அப்தில்லாஹ் ஆவான். ஆக, கூறுகிறார்கள்: அவன் தனது குதிரையை ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் எங்களிடம் குகைக்கு அக்கம்பக்கம் இருந்தான்; நாங்கள் குகையில் இருந்தோம்.

ஆக, நான் கூறினேன்: அவன் நம்மைப் பார்த்தால் கத்துவான். நாம் பிடிபடுவோம் ; மேலும் கொல்லப்படுவோம். அதாவது அவன் நிராகரிப்பாளர்களை அழைத்து விடுவான்.

அவர்கள் கூறுகிறார்கள்: என்னிடம் கத்தி இருந்தது. அதை நான் அபூ ஸுஃப்யானுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருந்தேன். நான் வெளியேறி அவன் நெஞ்சில் ஒரு குத்து குத்தினேன். அவன் கத்தினான். அப்பொழுது மக்கத்தினர் அவன் குரலைக் கேட்டு விட்டனர். நான் திரும்பி வந்து, குகையில் நுழைந்து விட்டேன். மக்கள் அவன் பக்கம் வேகமாக ஓடி வந்தனர். அவன் வாழ்வின் இறுதி நொடிகளில் இருந்தான். ஆக, அவர்கள் அவனிடம், உன்னைக் குத்தியது யார்? என்று கேட்டார்கள். அவன் அம்ர் பின் உமைய்யா என்று கூறினான். பிறகு, மரணம் அவன் மீது மேலோங்கி விட்டது. மேலும் அவன் அந்த இடத்திலேயே இறந்து விட்டான். அவனால் எங்கள் இடத்தை சொல்ல முடியவில்லை.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு இருக்கிறது. அவர்கள் அவனைக் கண்டபோது, மக்கத்தினரிடம் எங்கள் இடத்தை சொல்லும் அளவுக்கு அவனுக்குத் தெம்பு இருக்கவில்லை. அம்ர் பின் உமைய்யா அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் என் தோழரிடம், நீங்கள் உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடி விடுங்கள்; நீங்கள் செல்லுங்கள். உங்களது ஒட்டகத்திடம் செல்லுங்கள். அதில் அமர்ந்து சென்று விடுங்கள் என்று கூறினேன்.ஆக, அவர் போய் விட்டார்.

அம்ர் பின் உமைய்யா அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு நான் ஒரு மலை பக்கம் தஞ்சமடைந்தேன். குகையில் நுழைந்து விட்டேன். அம்ர் கூறுகின்றார்கள்: பிறகு நான் அங்கிருந்து புறப்பட்டேன். எதுவரை என்றால், அர்ஜ் எனும் இடத்துக்கு வந்து விட்டேன்.

அர்ஜ் என்பதும் மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையில் உள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். அங்கு பயணக் குழுக்கள் தங்கி வந்தன. பிறகு, நான் பயண விலங்கில் ஏறி செல்ல ஆரம்பித்தேன். எதுவரை என்றால், நான் நகீஃயை அடைந்ததும், நகீஃ மதீனாவில் இருந்து இரண்டு இரவுகள் பயணத் தொலைவில் இருந்த ஓரிடமாகும். இப்னு ஹிஷாமில் வரலாற்று நூலில் இந்த தூரம் எழுதப்பட்டுள்ளது. அப்பொழுது குறைஷியர்களில் இணைவைப்பாளர்களைச் சேர்ந்த இருவர் மதீனாவை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்கள் நிலைமைகளையும், நிகழ்வுகளையும் பார்த்து ஒற்றறிவதற்காக அவர்களைக் குறைஷியர்கள் ஒற்றர்களாக ஆக்கி அனுப்பியிருந்தனர். நான் அவர்கள் இருவரிடமும், உங்களை கைதிகளாக ஆக்குவதற்காக நீங்கள் இருவரும் சரணடைந்து விடுங்கள் என்று கூறினேன்.அவர்கள் இருவரும் மறுத்து விட்டனர். நான் அவர்கள் இருவரில் ஒருவரை அம்பு எய்து கொன்று விட்டேன். மற்றவர் சரணடைந்து விட்டார். நான் அவரைக் கட்டிப்போட்டு மதீனாவுக்கு அழைத்து வந்தேன்.

அப்படியே சரணடைந்து விடவில்லை. மாறாக, இருவருக்கு இடையே அங்கு சண்டை நடந்தது. ஒருவர் மற்றவர் மீது அம்பு எறிந்து கொண்டார்கள்.

எவ்வாறாயினும், அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தம்முடைய நிலைமைகளையும், நிகழ்வுகளையும் கூறத் துவங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்களுக்காக நன்மைக்கான துஆ செய்தார்கள்.

இந்தப் போர்ப் படை பற்றி சில மாறுபட்ட அறிவிப்புகள் உள்ளன. இப்னு ஹிஷாம், இப்னு கஸீர் மற்றும் தபரீ போன்றோர் இந்தப் போர்ப் படையை ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு நடைபெற்றதாக எடுத்துரைக்கின்றார்கள். இது தொடர்பாக ஹஸ்ரத் ஃஹுபைப் பின் அத்தீ (ரலி) அவர்களின் உடலை சிலுவை மரத்திலிருந்து இறக்கியது பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். ஹஸ்ரத் ஃஹுபைப் (ரலி) அவர்கள் ரஜீஃ நிகழ்வில் சிறைபிடிக்கப்பட்டு மக்காவில் விற்கப்பட்டிருந்தார்கள். குறைஷியர்கள் இவர்களை சிலுவை மரத்தில் கட்டி ஷஹீது ஆக்கியிருந்தார்கள்.

ஆனால், இப்னு ஸஃது அவர்கள் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்களின் போர்ப் படை தொடர்பாக குறிப்பிடும்போது உடலை சிலுவை மரத்திலிருந்து இறக்கியது பற்றி குறிப்பிடவில்லை. இது தொடர்பாக இப்னு ஸஃது (ரலி) அவர்களின் அறிவிப்பு மிகவும் சிறந்ததாகத் தெரிகிறது. ஏனெனில், ஹஸ்ரத் ஃஹுனைப் (ரலி) அவர்களின் உடலை இறக்குவதற்காக இன்னொரு குழு சென்றது பற்றி நூல்களில் தனியாகக் கிடைக்கப் பெறுகிறது.

ஸர்க்கானீ அவர்களும் இதே நிலைப்பாட்டில் இருந்துள்ளார்கள். அம்ர் பின் உமைய்யாவின் போர்ப் படையில் இறுதியில் ஃஹுபைப் பின் அத்தீயின் உடலை இறக்குவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்களையும் அனுப்பினார்கள். இது தொடர்பாக ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் எழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதியிருப்பதில் அம்ர் பின் உமைய்யாவின் இந்தப் போர்ப் படை தொடர்பாக, ஃஹுபைப் பின் அத்தீயின் உடலை சிலுவை மரத்திலிருந்து இறக்கிய நிகழ்வைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

இதன் விபரத்தை அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அகழ்ப் போரின் இழிவு நிறைந்த தோல்வியின் நினைவு மக்கத்து குறைஷியர்களைப் பெருங்கோபத்திற்கு ஆளாக்கியிருந்தது. மேலும், இயல்பாக இந்த மனத் தீ அதிகப்படியாக அபூ ஸுஃப்யானின் பங்கில் வந்தது. அவர் மக்காவின் தலைவராக இருந்தார். அகழ்ப் போர்த் திட்டத்தில் குறிப்பாக இழிவான அடிவாங்கியிருந்தார். சில காலம் வரை அபூ ஸுஃப்யான் இந்தத் தீயில் உள்ளுக்குள்ளேயே எரிந்து கொண்டிருந்தார். ஆனால், இறுதியில் விவகாரம் அவரது பொறுமையை விட்டு வெளியேறி விட்டது. அந்தத் தீயின் மறைவான கதிர்கள் வெளிவரத் துவங்கி விட்டன.

இயல்பாக நிராகரிப்பாளர்களுக்கு எல்லாரையும் விட அதிகம் பகைமை இன்னும் சொல்வதாயின் உண்மையில் அசல் பகைமை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தது. எனவே இப்பொழுது அபூ ஸுஃப்யான் வெளிப்படையான திட்டங்களுக்கும், தந்திரங்களுக்கும் எந்த விளைவும் வராததனால், ஏன் ஏதாவது ஒரு மறைமுகமான சூழ்ச்சியால் முஹம்மது (ஸல்) அவர்களையே தீர்த்துக்கட்டி விடக் கூடாது என்ற சிந்தனையில் மூழ்கி விட்டார்.

அவருக்குத் தெரியும்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி சிறப்பான எந்தக் காவலும் இருப்பதில்லை. இன்னும் சொல்வதாயின், சிலவேளை பெருமானார் (ஸல்) அவர்கள் முற்றிலும் பாதுகாப்பற்ற நிலையில் இங்கும், அங்கும் வந்து செல்வார்கள். நகரத்தின் வீதிகளில் தெருக்களில் சுற்றி வருவார்கள். பள்ளிவாசலில் தினமும் குறைந்தது ஐவேளை தொழுகைகளுக்காக வருகை தருவார்கள். பயணங்களில் முற்றிலும் இயல்பாக, சுதந்திரமாக இருந்து வந்தார்கள். இதை விடச் சிறந்த தருணம் ஒரு ஊதியம் பெறும் கொலையாளிக்கு என்ன இருந்திருக்க முடியும்? இந்த சிந்தனை வந்ததுமே அபூ ஸுஃப்யான் உள்ளுக்குள்ளேயே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்கான ஆலோசனையை உறுதியாக்கத் துவங்கி விட்டார்.

அவர் முழு உறுதியுடன் இந்த எண்ணத்தில் நிலைத்து நின்ற பிறகு, ஒருநாள் சந்தர்ப்பம் பார்த்து தனக்குத் தேவைக்குப் பொருத்தமான குறைஷிய இளைஞர்கள் சிலரிடம் மதீனாவுக்குச் சென்று காதும்காதும் வைத்தாற்போல் முஹம்மது (ஸல்) அவர்களைத் தீர்த்துக் கட்டி விடுபவர் உங்களில் எவரும் இல்லையா? முஹம்மது (ஸல்) அவர்கள் வெளிப்படையாக மதீனாவில் வீதிகளில், தெருக்களில் சுற்றித் திரிவார் என்பது உங்களுக்குத் தெரியும் என்று கூறினார்.

அந்த இளைஞர்கள் இந்த சிந்தனையைக் கேட்டதும், காற்றில் பறக்க ஆரம்பித்தனர். அவர்களுக்கு இது பிடித்து விட்டது. அதிக நாட்கள் ஆகியிருக்காது. ஒரு காட்டரபி இளைஞர் அபூ ஸுஃப்யானிடம் வந்து, நான் உங்கள் முன்மொழிவைக் கேட்டேன். நான் அதற்காக ஆயத்தமாக இருக்கிறேன் என்றார்.

முன்னர் எடுத்துரைக்கப்பட்டது போன்றே அந்த நிகழ்வை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள்:

அவர் இதையும் கூறினார்: நான் ஒரு வலுவான உள்ளம் கொண்டவன் உறுதியாக வேலை செய்யும் மனிதன் ஆவேன்; எனது பிடி கடுமையானதாகவும், தாக்குதல் துரிதமானதாகவும் இருக்கும்; நீங்கள் என்னை இந்த வேலைக்காக நியமித்து எனக்கு உதவி செய்தால், நான் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக செல்லத் தயாராக இருக்கிறேன்; என்னிடம் எப்படிப்பட்ட

ஒரு கத்தி இருக்கிறது என்றால், அது வேட்டையாடும் கழுகின் மறைவான இறக்கையைப் போன்று இருக்கும்; ஆக, நான் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பேன்; பிறகு, ஓடிப்போய் ஏதாவது ஒரு கூட்டத்திற்குள் கலந்து விடுவேன்;முஸ்லிம்களால் என்னைப் பிடிக்க முடியாது.

அவர் கூறிக் கொண்டிருக்கும் இது அதே நிகழ்வுதான். முன்னர் நடந்தது. இதைத் தான் அவர் கூறினார். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் இதை மீண்டும் எழுதியுள்ளார்கள்)

பிறகு அவர் கூறினார்: நான் மதீனாவின் வழிப்பாதையிலும் கைத்தேர்ந்தவன் ஆவேன்; போதும்; போதும்; நீயே எங்களுக்கு தேவையான ஆள் என்று அபூ ஸுஃப்யான் கூறினார்.

இதற்கு பிறகு, அபூ ஸுஃப்யான் அவருக்கு ஒரு வேகமாக ஓடும் ஒட்டகத்தையும் பயணத்துக்குத் தேவையானவை போன்றவற்றையும் கொடுத்து அனுப்பி வைத்தார். மேலும், இந்த இரகசியத்தை யாருக்கும் தெரிய விடக் கூடாது என்று வலியுறுத்திக் கூறினார்.

மக்காவை விட்டு வெளியேறி இந்த நபர் பகலில் ஒளிந்து கொண்டும், இரவில் பயணம் செய்தும் மதீனாவை நோக்கிப் பயணமானார். ஆறாவது நாள் மதீனாவை சென்றடைந்து விட்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறித்து விசாரித்தவாறு நேராக பனூ அப்தில் அஷ்ஹலின் பள்ளிவாசலை அடைந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பொழுது அங்கு சென்றிருந்தார்கள். ஆக, அந்த நாட்களில் புதுப்புது மனிதர்கள் மதீனாவுக்கு வந்து கொண்டிருந்தார்கள். எனவே முஸ்லிம்கள் யாருக்கும் அவரைக் குறித்து சந்தேகம் வரவில்லை.

ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரைத் தன் பக்கம் வரக் கண்டதும், பள்ளிவாசலுக்கு சென்றிருந்தார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: இந்த மனிதன் ஏதோ தீய எண்ணத்தில் வந்துள்ளான்.

அவர் இந்த சொற்களைக் கேட்டுவிட்டு இன்னும் வேகமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நோக்கி வந்தார். ஆனால், உஸைது பின் ஹுஸைர் எனும் அன்ஸாரி தலைவர் ஒருவர் உடனடியாக பாய்ந்து அவரைப் பற்றிக் கொண்டார்கள். இந்தப் போராட்டத்தில் அவர்களது கை மறைத்து வைத்திருந்த அவரது கத்தியில் போய் பட்டது. அதனால் அவர் பதற்றமடைந்து என் இரத்தம் என் இரத்தம் என்று கத்தினார்.

இங்கு அவர்கள் மேற்கொண்டு விபரத்தை எழுதியுள்ளார்கள்: போர்வையை மட்டும் இழுக்கவில்லை. அதற்கும் மேற்பட்டு முறையாக அவர்கள் அவரைப் பிடிக்க முயற்சி செய்தார்கள். அதனால் பிறகு அவரது கத்தி கையிலிருந்து நழுவி விட்டது.

எவ்வாறாயினும், பிறகு அவர் என்னை மன்னித்து விடுங்கள் என்று கத்தினார். அவர் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவரிடம் நீ யார்? என்ன எண்ணத்தில் வந்திருக்கிறாய்? என்று உண்மையைக் கூறிவிடு! அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் எனக்கு உயிர்பிச்சை வழங்கப்பட்டால் பின்னர் கூறுவேன் என்றார். பிறகு ஏற்கனவே கூறப்பட்டது போன்று, அவர் முழுக் கதையையும் கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரிடம், ஆகட்டும்! நீ மன்னிக்கப்படுகிறாய்! என்று கூறினார்கள்.

அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பணிவுடன் கூறிவிட்டார். அபூ ஸுஃப்யான் தன்னிடம் இந்த அளவு பரிசுக்கான வாக்குறுதி அளித்திருந்தார் என்று கூறினார். இதற்குப் பிறகு, இந்த நபர் சிலநாட்கள் வரை மதீனாவில் தங்கினார். பிறகு, தனது சொந்த விருப்பப்படி முஸ்லிம் ஆகி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான பேரன்பில் திளைத்தவர்களில் ஒருவராகி விட்டார்.

அபூ ஸுஃப்யானின் இந்தக் கொலை சதித் திட்டமானது மக்கத்தினரின் எண்ணங்கள் மற்றும் நிய்யத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதை முன்னரை விட அதிகம் அவசியமானதாக ஆக்கி விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்ர் பின் உமைய்யா (ரலி) அவர்கள் மற்றும் ஸல்மா பின் அஸ்லம் (ரலி) அவர்கள் ஆகிய தம் ஸஹாபிகள் இருவரை மக்காவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ ஸுஃப்யானின் இந்தக் கொலை சூழ்ச்சியையும் அவரது முந்தைய இரத்த வெறி நடவடிக்கைகளையும் பார்த்தவாறு, சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றால் போர்க் குணமிக்க இஸ்லாத்தின் இந்த எதிரியை ஒழித்து விடுங்கள் என்று அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள்.

ஆனால், உமைய்யா அவர்களும் அவர்களின் தோழரும் மக்காவை அடைந்தபோது, குறைஷியர்கள் மிகவும் எச்சரிக்கையாகி விட்டார்கள். இந்த ஸஹாபா இருவரும் தமது உயிரைக் காப்பாற்றிக் கொணடு மதீனாவின் பக்கம் திரும்பி வந்தார்கள். வழியில் அவர்கள் குறைஷியர்களின் ஒற்றர்கள் இருவரை சந்தித்தார்கள். அவர்களை குறைஷிய தலைவர்கள் முஸ்லிம்களின் நடவடிக்கை பற்றி தெரிந்து கொள்வதற்காகவும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நிலைமைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும் அனுப்பியிருந்தனர்.

இந்தத் திட்டமும் குறைஷியர்களின் வேறு ஏதோ கொலை சதித் திட்டத்தின் முன்னோடியாக இருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், இறையருள் ஏற்பட்டது. உமைய்யா மற்றும் ஸலமாவுக்கு இவர்களது ஒற்றறிதல் பற்றித் தெரிந்து விட்டது. அதனால் அவர்கள் அந்த ஒற்றர்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை சிறைபிடிக்க நினைத்தனர். ஆனால், அவர்கள் எதிர்த்து சண்டையிட்டார்கள். ஆக, இந்த சண்டையில் ஒற்றன் ஒருவனோ கொல்லப்பட்டான். மற்றொருவனை சிறைபிடித்து அவர்கள் தம்முடன் மதீனாவுக்குத் திருப்பி அழைத்து வந்தனர்.

மற்றவை இனி எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

பாகிஸ்தானின் நிலைமைகளுக்காக நான் துஆவிற்காகக் கூறிக் கொண்டே இருக்கிறேன். இதிலோ இப்பொழுது பயங்கரவாதம் சிலவேளை மிகவும் அதிகமாக வந்து விடுகிறது. நிர்வாகமும், அரசாங்கமும் கூட பயங்கரவாதத்தை விரும்பும் மவ்லவிகளின் கைகளில் பொம்மைகளாகியிருப்பதாகத் தெரிகிறது. முன்னரோ பள்ளிவாசலின் மினாராவை இடித்துத் தள்ளிவிட்டார்கள்; மிஹ்ராபை இடித்து தள்ளிவிட்டார்கள் என்ற செய்திகள் வந்து கொண்டிருந்தன. அவர்களுக்கு இந்த ஆட்சேபனை இருந்தது.

ஆனால், இப்பொழுது டஸ்கா எனும் இடத்தில் நேற்று அவர்கள் பாதை அமைக்கிறோம் என்ற சாக்கில், முதலில் இவ்வளவு இடத்தை நாங்கள் எடுத்துக் கொள்வோம் ; அங்கு புல்டோசரை இயக்கி இடத்தை காலி செய்வோம் என்று நோட்டீஸ் அனுப்பினார்கள். இதில் பள்ளிவாசலின் குளியலறை போன்றவற்றின் சில பகுதிகள் வந்தன. ஆனால், புல்டோசர் கொண்டு வந்தபோது, அவர்கள் மவ்லவிகள் கூறியதன்பேரில், முழு பள்ளிவாசலையும் இடித்துத் தள்ளிவிட்டார்கள். ஷஹீது ஆக்கி விட்டார்கள்.

இது கட்டப்பட்ட பழைய பள்ளிவாசலாகும். நாடு பிரிவினைக்கு முன்னர் கட்டப்பட்டதாகும். ஹஸ்ரத் சவ்த்ரீ ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்கள் இதை கட்டியிருந்தார்கள் என்று நினைக்கின்றேன். எவ்வாறு இருப்பினும், இவர்கள் இன்றைய காலத்தில் எந்த அளவுக்கு மிகைத்து விட்டனர் என்றால், அல்லாஹ்வே இவர்களை விரைவாக பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வானாக! இவர்களுடைய சூழ்ச்சியை இவர்கள் மீது திருப்பி விடுவானாக! எனவே அஹ்மதிகள் குறிப்பாக பாகிஸ்தானின் அஹ்மதிகள் மிகவும் அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டும். இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

இதே போன்று பாலஸ்தீனம் தொடர்பாகவும் செய்யப்படும் உடன்படிக்கை குறித்தும், சிலசமயம் செய்யப்பட்டு விட்டது என்றும், சிலசமயம் செய்யப்படவில்லை என்றும் கூறுகின்றார்கள். உடன்படிக்கைக்குப் பிறகு மீண்டும் சம்பவங்கள் நடக்கின்றன.

ஆக இந்த விஷயத்தில் மக்கள் சிலர் தேவையில்லாமல் மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டனர். ஆனால், அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தஜ்ஜாலிய சக்திகள் மீது எந்த நம்பிக்கையும் கிடையாது. இவர்கள் சொல்வது ஒன்று; செய்வது ஒன்று. எனவே இந்த அளவு மெத்தனமாக இருந்து விடக் கூடாது. அவர்களுக்காக துஆவிற்கான தேவையும் இருக்கின்றது. முஸ்லிம்கள் அறிவுடைமையுடன் செயல்பட்டு தங்களுடைய உரிமைகளைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹுத்ஆலா முஸ்லிம் சமுதாயத்திற்கு இதற்கான அறிவை வழங்குவானாக!

இப்பொழுது நான் சில மர்ஹூம்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். பின்னர் ஃகாயிப் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன்.

முதலாவது நற்குறிப்பு, மதிப்பிற்குரிய ஷேக் முபாரக் அஹ்மது ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ரப்வாவில் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நாஸிர் தீவானாக இருந்தார்கள். ஜனவரி 11 அன்று 70-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். பிறப்பால் அஹ்மதி ஆவார்கள். இவர்களின் தந்தை வழிப் பாட்டனார் ஷேக் முஹம்மது தீன் ஸாஹிப் அவர்கள் 1938-இல் பைஅத் செய்தார்கள். இவர்கள் குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டலா தாலுகாவின் கத்துநங்கல் ஊரைச் சேர்ந்தவர் ஆவார்கள். ஷேக் முபாரக் ஸாஹிப் அவர்கள் B.A.B.ED,ஐ முடித்த பிறகு 66 -லிருந்து 81 வரை ஏறத்தாழ 15 ஆண்டுகள் தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப்பள்ளியின் ஆசிரியராகப் பணியாற்றினார்கள்.

இதுபோக, பிற்காலத்தில் 73 இல் பள்ளிக் கூடங்கள் தேசியமயமானதும், அதற்குப் பிறகு இவர்கள் மற்ற சில பள்ளிக் கூடங்களிலும் அரசாங்கத் தொண்டாற்றினார்கள். படித்துக் கொடுக்கும் கடமைகளை நிறைவேற்றினார்கள். எவ்வாறாயினும் 40 ஆண்டுகள் வரை இவர்கள் ஜமாஅத்துக்குத் தொண்டாற்றிய காலம் இருந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் இவர்கள் 1982-ல் வக்ஃபை முன்வைத்தார்கள். அவர்கள் இவர்களது வக்ஃபை ஏற்றுக் கொண்டார்கள்.

பிறகு 1982-ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நூற்றாண்டு நிகழ்ச்சியில் இவர்களை நாயிப் வக்கீலாக நியமித்தார்கள். பிறகு, நாயிப் வக்கீலுல் மாலாக இவர்களுக்குத் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அடிஷனல் நாஸிர் பைத்துல் மால் ஆகத் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு, இவர்கள் நாஸிர் பைத்துல்மால் ஆகவும் பணியாற்றினார்கள். அதற்குப் பிறகு, நாஸிர் தீவானாகவும், நாஸிர் ரிஷ்தா நாத்தா ஆகவும் ஒரு நீண்ட காலம் இவர்களுக்கு ஜமாஅத்துக்குத் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. இவ்வாறே கிளை அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளில் அன்ஸாருல்லாஹ்வின் காயித் ஆகவும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முஹ்தமிம் ஆகவும் இருந்துள்ளார்கள்.

இவர்களின் சகோதரி மகனும், மருமகனுமான இஹ்ஸான் மஹ்மூத் ஸாஹிப் முரப்பி ஆவார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: கிலாஃபத்தோடு களங்கமற்றத் தன்மை மற்றும் நன்றியுணர்வுக்கான தொடர்பைக் கொண்டிருக்குமாறு எப்பொழுதும் இவர்கள் கூறிவந்தார்கள். நிதி விவகாரத்தில் தலையிடக் கூடாது என்று முரப்பிமார்களுக்கு அறிவுரை கூறிவந்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகைகளை முறையாகப் பேணி வந்தார்கள். கடைசி வயது வரை தொழுகைகளைப் பள்ளிவாசலுக்கு சென்று நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்து வந்தார்கள்.

ஜமாஅத் ரீதியிலான மற்றும் தனிப்பட்ட சபைகளில் கிலாஃபத்துடன் எப்போதும் உங்களை இணைத்து வைத்திருக்குமாறு (மக்களுக்கு) வலியுறுத்துவார்கள். மேலும் என் சந்ததிகளையும் கிலாஃபத்தோடு இணைத்து வைப்பாயாக என்று (அல்லாஹ்விடம்) துஆ செய்து வந்தார்கள்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒவ்வொரு விஷயத்தையும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு எழுதுகிறேன்; மறைப்பதில்லை; தவறு ஏற்பட்டு விட்டால், அதில் சீர்திருத்தம் ஏற்படும் பொருட்டு எனக்குப் பலன் ஏற்படும் பொருட்டு அப்பொழுதும் எழுதி விடுகிறேன்.

அல்லாஹ்வின் அருளால் வக்ஃபை இவர்கள் நன்றாக நிறைவேற்றினார்கள். நான் அஞ்சுமனில் இருந்தபோது, நானும் பார்த்திருக்கின்றேன்; இவர்கள் என்னோடு பணியாற்றி இருக்கின்றார்கள்; எப்பொழுதும் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை அளிக்கும் விஷயத்தில் ஒரு முன்னுதாரணமாக இருந்தார்கள். எளிமையாக இருப்பார்கள். எளிமையாக வாழ்வைக் கழிப்பார்கள். தமது நேரத்தை முழுமையாகக் கொடுப்பார்கள். பெரும்பாலும் இப்படி நடக்கும். அதாவது சுற்றுப் பயணம் செய்வார்கள்.

சுற்றுப் பயணம் செய்து திரும்பி வந்தார்களா அலுவலகத்தில் வேலை பார்த்தார்களா என்று இருப்பார்கள். மாலையில் மீண்டும் சுற்றுப் பயணத்துக்குச் சென்று விடுவார்கள். எனக்கு தொண்டாற்றும் வாய்ப்புக் கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற முயற்சியே இருந்து வந்தது. ஒருமுறை இவர்களுடைய பிள்ளைகளில் ஒருவர் ஓய்வெடுக்க ஆலோசனை கூறினார். இவர்கள் நோய்வாய்ப்பட்டும் விட்டார்கள். அப்பொழுது இவர்கள் எனது மரணத்தில்தான் எனக்கு பணி ஓய்வு நடக்கும் என்று கூறினார்கள்.

அலுவலகத்தில் ஊழியர்களும் இவர்களிடம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: எப்பொழுதும் எங்கள் மீது அக்கறை கொள்வார்கள். எல்லா விஷயத்தையும் ஆய்வு செய்வார்கள். அதை முழுமைப்படுத்த முயற்சி செய்வார்கள். எங்களுடைய சொந்தத் தேவைகளையும் முழுமைப்படுத்த முயற்சி செய்வார்கள்.

இதே போன்று இவர்கள் எழுதியுள்ளார்கள்: நூல் வாசிப்பதற்கான பேரார்வம் இருந்தது. மேலும் கூறுகிறார்கள்: நான் பார்த்திருக்கின்றேன்;வீட்டில் எப்பொழுதும் நூல்களைப் படித்துக் கொண்டிருப்பார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களையும், மல்ஃபூஸாத்தையும் மிகவும் ஆழமாக படித்து வந்தார்கள். பிள்ளைகளுக்கும் இதை வலியுறுத்திக் கூறிவந்தார்கள். ஜமாஅத்தின் சட்டத்திட்டங்களைப் பற்றி இவர்கள் மிக நன்றாக அறிந்திருந்தார்கள். தீர்மானம் எடுக்கும் ஆற்றலும் இருந்தது. அல்லாஹ் இவர்களுக்குத் திறமைகளை வழங்கியிருந்தான். அஞ்சுமனின் சட்டத்திட்டங்களின் Revision நடந்தபோது, அப்பொழுது கமிட்டியிலும் இருந்தார்கள். பெரும் கருத்து கூறுபவராக இருந்தார்கள். கருத்து தெரிவித்து வந்தார்கள்.

கராச்சியைச் சேர்ந்த ஸய்யிது தாவூத் அஹ்மது அவர்கள் பைத்துல் மால் இன்ஸ்பெக்டர் ஆவார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: 23 ஆண்டுகள் நஸாரத் மால் ஆமதில் ஷேக் ஸாஹிப் அவர்களின் கண்காணிப்பின் கீழ் பணி புரிந்தார்கள். மிகவும் நல்ல தோரணையில் எங்களிடம் வேலை வாங்குவார்கள். தவறு ஏற்படும் இடத்தில் புரிய வைப்பார்கள். நல்ல வேலை செய்யும் இடத்தில் ஊக்குவிப்பார்கள். அலுவலகத்தின் ஊழியர் ஒவ்வொருவருக்கும் ஷேக் ஸாஹிப் என்னோடு சிறப்பான தொடர்பு வைத்திருக்கிறார் என்றே நினைப்பார்.

ஊழியர் ஒவ்வொருவரின் வீடு மற்றும் துறைச் சார்ந்த பிரச்சனைகளில் குறிப்பாக கண் வைத்திருப்பார்கள். இயன்ற அளவுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுக்கு ஆறு மகள்களும் ஒரு மகனும் இருக்கிறார்கள். ஒரு துணைவியாரும் இருக்கிறார்கள்.

இரண்டாவது நற்குறிப்பு, கத்தாரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது முனீர் அதீல்பீ ஸாஹிப் ஆவார்கள். இவர்கள் கடந்த நாட்களில் 76 வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களுக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் கத்தாரில் இருக்கிறார்கள். முஸல்லாம் தாருபீ ஸாஹிப் கூறுகிறார்கள்:

இவர்கள் மூலமாகவே நானும் என் சகோதரரும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டோம். அவர்கள் சுறுசுறுப்பான முபல்லிஃக் ஆகவும், சொற்பொழிவாற்றுபவராகவும், புத்திசாலியாகவும் இருந்தார்கள். 1984 இன் ஆரம்பத்தில் இவர்கள் பைஅத் செய்தார்கள். இவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை சந்தித்த பிறகு இங்கு லண்டனில் நீண்ட காலம் இருந்தார்கள். லிக்கா மஅல் அரபின் சில நிகழ்ச்சிகளையும் மற்ற சில நிகழ்ச்சிகளையும் மொழியாக்கமும் செய்தார்கள்.

இவர்கள் பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார்கள். அவற்றில் ஏழு நூல்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தப்லீஃகை உள்ளடக்கிய கருத்துக்களைப் பற்றியதாகும். தாமதமாக வந்தார்கள். ஆனால், நிறைய வேலை செய்து விட்டு சென்று விட்டார்கள்.

சிரியா ஜமாஅத்தில் தப்லீஃக் செயலராகவும், தஃலீம் மற்றும் தர்பிய்யத் செயலராகவும் தொண்டாற்றினார்கள். இவர்கள் மூலமாக பல மக்கள் பைஅத் செய்துள்ளார்கள். மோஷரப் எனும் சிற்றூரில் இவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. இதன் அடிப்படையில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் ஒருமுறை இவர்களுடைய வாகனத்தையும் எரித்து விட்டார்கள். இவர்களுடைய விவாதங்கள் மற்றும் தப்லீஃக் அமர்வுகளின் காரணமாக அதிகாரிகளிடம் புகார் அளிக்கப்பட்டது. அதன் காரணத்தால் அங்கு மோஷரப் பகுதியின் சில மக்களோடு 1989-இல் முந்தைய அரசாங்கத்தின் சிறைச்சாலைகளில் பல மாதங்கள் சிறைபட்டிருந்தார்கள். சிரியாவின் நிலைமை மோசமான பிறகு தம் பிள்ளைகளோடு கத்தாருக்குச் சென்றுவிட்டார்கள்.

சிரியாவின் சத்ர் ஜமாஅத் வஸீம் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: இவர்கள் பல நூல்களை எழுதினார்கள். அவற்றின் மூலம் அஹ்மதி நூலகம் நிறைந்தது. அஹ்மதிய்யத்தின் போதனைகளை இவர்கள் எளிய முறையில் தெளிவாக எடுத்து வைத்தார்கள். இவர்களால் பல பேர் அஹ்மதிய்யத்தில் இணைந்தார்கள். பாசில் அதீல்பீ ஸாஹிப் கூறுகின்றார்கள்: இவர்கள் தம் வாழ்நாள் முழுவதையும் அஹ்மதிய்யத்துக்குத் தொண்டாற்றுவதில் கழித்து விட்டார்கள். கிலாஃபத்தின் மீது பேரன்பு கொண்டவராக இருந்தார்கள்.

இவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்காக

திருக்குர்ஆனிலிருந்து...

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஆங்கிலத்தில் இருந்து அரபியில் மொழியாக்கம் செய்தார்கள். அஹ்மதிய்யத்தின் போராளியாக இருந்தார்கள். இவர்கள் அஹ்மதிய்யத்தின் தப்லீஃக்கிற்காகவும், நஷ்ரோ இஷாஅத்திற்காகவும் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து விட்டார்கள். சிரியாவில் இருக்கும் அஹ்மதிகள் பலரின் நேர்வழிக்குக் காரணமானார்கள்.

தப்லீஃக்கிற்காக இவர்கள் பல நாடுகளுக்குப் பயணமும் செய்திருந்தார்கள். 2013-இல் சிரியாவின் நெருக்கடி காலத்தின் காரணமாக கத்தாருக்குச் சென்று விட்டார்கள். அங்கு ஃபேஸ் புக்கில் அஹ்மதிய்யத் பற்றியும் கிலாஃபத் பற்றியும் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஆர்வம் கொண்டிருந்தவர்களுடன் தொடர்பில் இருந்து வந்தார்கள். இவர்கள் மிகவும் கருத்தாழமிக்க சொற்பொழிவாளராக இருந்தார்கள். மேலும், திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்திலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியின் உண்மைத்துவத்திற்கான சான்றுகள் மற்றும் சாட்சிகள் மீது ஆழமான பார்வை கொண்டிருந்தார்கள். இவர்கள் கிலாஃபத்தின் மகத்துவம் மற்றும் அதைத் தற்காப்பதில் ஆங்கிலத்திலிருந்து அரபியில் பல்வேறு நூல்களை மொழியாக்கம் செய்துள்ளார்கள்.

இவர்கள் தமது இயல்பு, நாவு, எழுதுகோல் மற்றும் வாழ்க்கையை அஹ்மதிய்யத்தின் தப்லீஃக்கிற்காகவும், அஹ்மதிய்யத்தை தற்காப்பதற்காகவும் அர்ப்பணித்து விட்டார்கள். தமது நிலைப்பாடு மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியின் உண்மையில் ஈமான் கொண்டதன் காரணமாக இவர்களுக்குத் தமது குடும்பத்தின் தரப்பிலிருந்தும், டமாஸ்கஸின் சமூகத்தின் தரப்பிலிருந்தும் பல துயரங்களை சகித்துக் கொள்ள நேரிட்டது.

நஸார் அஜீப் ஸாஹிப் கூறுகிறார்கள்: எனக்கு அதீல்பீ ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் பற்றிய அறிமுகம் ஏற்பட்டது. மதிப்பிற்குரிய ஃஹாலித் அஸாம் ஸாஹிப் அவர்கள் தஜ்ஜாலைப் பற்றிய இவர்களது நூலை எங்கிருந்தோ பெற்றார்கள். எனக்கு இந்த நூல் மிகவும் பிடித்து விட்டது. அது என்னுடைய புரிதல்கள் அனைத்தையும் மாற்றி அமைத்து விட்டது. அதற்குப் பிறகு நான் முர்தத்தைக் கொல்லுதல், பிறகு ஜின்களைப் பற்றிய இவர்களுடைய நூல்களை படித்தேன். இவர்களோடு ஃபோனில் தொடர்பு கொண்டேன். பிறகு நானும் ஃஹாலித் அஸாம் ஸாஹிப் அவர்களும் பைஅத் செய்து விட்டோம்.மர்ஹூமிற்கு தெரிய வந்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

கத்தாரின் சத்ர் ஜமாஅத் டாக்டர் இம்ரான் ரஹ்மான் ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மிக அதிகமாக பணிவான இயல்பை உடையவராக இருந்தார்கள். ஜமாஅத் அமைப்புடன் எப்பொழுதும் வலுவான தொடர்பு கொண்டிருந்தார்கள். கிலாஃபத்துடன் அன்னாருக்கு இருந்த அன்பும், கட்டுப்படுதலும் மிகவும் அசாதாரணமானவையாக இருந்தன. எம்.டி.ஏவின் மூலமாக குத்பாக்களை இங்கு கேட்பார்கள்.என்னுடைய மற்ற நிகழ்ச்சிகளையும் பார்ப்பார்கள். இதைப் பெரிதும் வெளிப்படுத்தி வந்தார்கள்.

பொருள் தியாகத்தில் முன்னணி வகித்து வந்தார்கள். எல்லாருக்கும் முதலாக தமது சந்தா செலுத்தப்படுவதை உறுதிப்படுத்துவார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: மரணத்திற்கு சில நாட்கள் முன்னரும் இவர்கள் தமது வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்த வேண்டும் ; அதை வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று என்னையும், முரப்பி ஸாஹிப் அவர்களையும், செகரட்டரி மால் அவர்களையும் தம் வீட்டுக்கு அழைத்தார்கள்.

தவறான அறிக்கைகளின் காரணமாக அங்கும் இவர்களை பாதுகாப்பு அதிகாரிகள் அழைத்தார்கள். ஆனால், பிறகு விட்டு விட்டார்கள் - இல்லை இது பழைய விஷயத்தைக் கூறுகிறார்கள். 1998 இல் இவர்களை அங்கே சிரியாவிலேயே அழைத்ததாகக் கூறுகிறார்கள்.

ஒருவர் இதைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்: இவர்கள் சிரியாவின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குப் பலமுறை அழைக்கப்பட்டார்கள். அங்கு இவர்கள் இஸ்லாத்தில் முர்தத்திற்கான தண்டனைப் பற்றி தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர்களுடன் விவாதம் செய்தார்கள். இந்த விஷயத்துக்காக இவர்களுக்கு கொலை மிரட்டல் வந்தன.

அவற்றில் சில ஆன்லைனில் வெளியாகவும் செய்தன. இவர்கள் ஒரு ஃபேஸ்புக் பக்கத்தையும் நடத்தி வந்தார்கள். அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களில் இருந்து மேற்கோள்கள் பகிரப்பட்டு வந்தன. அதை அஹ்மதிகள் மற்றும் அஹ்மதி அல்லாதவர்கள் என இருசாராரும் ஃபாலோ செய்து வந்தார்கள். அன்னார் தம் வாழ்நாள் முழுவதையும் தமது இறுதி மூச்சு வரை தமது எழுதுகோல் மற்றும் தம்முடைய சொற்களுடன் உறுதியாக இருந்தவாறு கழித்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதும், உலகில் அல்லாஹ்வின் உண்மையான மார்க்கத்தைப் பரப்புவதுமே இவர்களது அடிப்படைக் கவலையாக இருந்தது. எந்த வாய்ப்பு கிடைத்தாலும் அங்கு அமர்ந்து உரையாடலை அஹ்மதிய்யத் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் அன்னாரது தூதுச் செய்தியை பரப்புவதன் பக்கம் திருப்புவதற்கான சந்தர்ப்பத்தை கை நழுவ விட்டு விடமாட்டார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களின் பிள்ளைகளையும் நன்மைகளில் நிலைத்திருக்கச் செய்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக!

மூன்றாவது நற்குறிப்பு, அப்துல் பாரீ தாரிக் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ரப்வாவின் வக்ஃபே ஜதீதின் கம்ப்யூட்டர் செக்ஷனின் இன்சார்ஜ் ஆக இருந்தார்கள். இவர்கள் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

வக்ஃபே ஜதீதின் சத்ர் ஸாஹிப் எழுதுகிறார்கள்: இவர்களின் தந்தை வழிக் கொள்ளுப்பாட்டனாரான, ஸியால்கோட் மாவட்டத்தின் குட்யாலியானைச் சேர்ந்த சவ்த்ரீ முஹம்மது யார் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது.

அவர்கள் 1903 இல் ஒரு கடிதத்தின் மூலமாக பைஅத் செய்து அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். மர்ஹூம் அவர்களின் தந்தை வழிப் பாட்டனார் சவ்த்ரீ குலாம் காதிர் ஸாஹிப் அவர்கள் பிறப்பால் அஹ்மதி ஆவார்கள். இவர்கள் எம்.எஸ்.ஸி கம்ப்யூட்டர் சைன்ஸ் படித்திருந்தார்கள். பிறகு கராச்சியில் ஊழியம் செய்து வந்தார்கள். பிறகு இவர்களுக்குப் புற்றுநோய் வந்து விட்டது. பிறகு அதிலிருந்து உடல்நலமடைந்தார்கள்.

பிறகு கேன்ஸர் மீண்டும் வந்தது. பிறகு இவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அவர்கள் இவர்களுக்கு ஹோமியோபதி மருந்தையும் அனுப்பி வைத்தார்கள். மேலும் மற்றபடி ஹோமியோபதி சிகிச்சை எடுத்துக் கொள்ளுமாறு அவர்களிடம் கூறினார்கள். அத்துடன் அவர்கள் வக்ஃப் செய்வதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். இவர்களைத் தஹ்ரீகே ஜதீதுக்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு, இவர்கள் வக்ஃபே ஜதீதில் பணியமர்த்தப்பட்டார்கள். அலுவலகங்கள் அனைத்தையும் .கம்ப்யூட்டரைஸ்ட் ஆக்கியது மட்டுமல்லாமல் ஜமாஅத்தின் மற்ற நிறுவனங்களிலும் அதிகமாக பணியாற்றினார்கள்.

இன்னும் கூறுவதாயின், பாகிஸ்தானுக்கு வெளியில், கானா அஹ்மதிய்யா மருத்துவமனை, நைஜீரியா மற்றும் பெனின் அஹ்மதிய்யா மருத்துவமனையை கம்பூட்டரைஸ்ட் செய்வதற்கும் நல்வாய்ப்பு கிடைத்தது. இன்னும் கூறுவதாயின், கானாவின் டாக்டர் ஸாஹிப் அவர்களோ இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

நாங்கள் கம்ப்யூட்டரைஸ்ட் செய்ய விரும்பியபோது, லட்சக்கணக்கில செலவு இருந்தது. மலிவிலும் மலிவாகவும் கூட ஆயிரக்கணக்கான டாலர்களில் எங்களுக்கு எஸ்டிமேட் கிடைத்திருந்தது. ஆனால், இவர்கள் அங்கு வந்தார்கள். ஒரு மாதம் இருந்து, மிகவும் சாதாரண தொகையில் எல்லா வேலையையும் செய்து விட்டார்கள்.

இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் தாயார், துணைவியார், ஒரு மகன் மற்றும் ஐந்து சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள். இவர்கள் வக்ஃப் செய்தார்கள். நோய்க்குப் பிறகு உடல்நலம் பெற்றார்கள். இவர்கள் உடல்நலம் பெற்று வக்ஃப் செய்வேன் என்று உறுதி எடுத்துக் கொண்டிருந்தார்கள். உடல்நலம் பெற்றார்கள். பிறகு இவர்கள் வாழ்வை அர்ப்பணித்த காலகட்டமான 21 ஆண்டுகள் வரை தன்னலமின்றி பணியாற்றினார்கள். பகல் இரவு என்று பார்க்கவில்லை. வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு எத்தகைய முன்மாதிரியை நிலைநாட்டினார்கள் என்றால், அது அவர்களுக்கும் பின்பற்றத் தக்கதாகும்.

அன்ஸாருல்லாஹ் மர்கஸிய்யாவிலும் இவர்கள் காயிதாகப் பணியாற்றி வந்தார்கள். அங்கு செல்வதற்காகவே ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. மரணமடைந்து விட்டார்கள்.

சத்ர் அன்ஸாருல்லாஹ் டாக்டர் சுல்தான் ஸாஹிப் கூறுகின்றார்கள்:

இவர்கள் அமைப்பு, இயக்கம் மற்றும் கிலாஃபத்துக்கு மிகவும் நன்றியுள்ள மனிதராக இருந்தார்கள். மேலும், இவர்கள் தமது வக்ஃபை முழு நன்றியுணர்வோடு நிறைவேற்றினார்கள். இவர்கள் மார்க்கத்துக்குத் தொண்டாற்றுவதில் முழுவதுமாக மூழ்கியிருப்பதிலேயே தம்மை மகிழ்ச்சியாக உணர்வார்கள். பொறுப்பை

நிறைவேற்றுதில் நிம்மதியை உணர்ந்து வந்தார்கள்.

ஒருவர் இவர்களிடம், தொழில் குறித்து நீங்கள் மக்களின் வேலைகளை செய்கிறீர்களே அதற்கு அவர்களிடமிருந்து ஊதியம் பெற்றுக் கொள்ளுங்கள். சாஃப்ட்வேர் போன்றவற்றைத் தயாரிக்கிறீர்கள். நீங்கள் இவ்வளவு கடினமாக உழைக்கிறீர்கள் என்று கூறினார். அதற்கு, நான் வாழ்வை அர்ப்பணித்தவன் ஆவேன்; எனக்கு கைமாறு இறைவனிடம் கிடைக்கும் என்று இவர்கள் கூறினார்கள்.

நான் கூறியது போன்று, இவர்கள் வக்ஃபின் எதிர்பார்ப்புகளை மிக நன்றாக நிறைவேற்றினார்கள். மேலும், வக்ஃபின் பரக்கத்துகள் மீது முழுமையான நம்பிக்கை இருந்தது. இறுதி மூச்சு வரை கித்மத் செய்வதற்கான உறுதி எடுத்திருந்தார்கள். அதை அவர்கள் நிறைவேற்றினார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக.

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *

முதல் பக்கத் தொடர்ச்சி....
(மல்ஃபூஸாத் ..)

தொட்டிருந்தது. எனது கோட்பாடு இதுவாகும். அதாவது இறைத் தூதர் (ஸல்) அவர்களை தனியாக வைத்து, மற்றொரு பக்கம் அது வரை தோன்றியிருந்த அனைத்து நபிமார்கள் அனைவரும் ஒன்றிணைந்து இறைத் தூதர் (ஸல்) அவர்கள் செய்த அந்தப் பணியையும் சீர்திருத்தத்தையும் செய்ய விரும்பினால் அதனை அவர்களால் ஒருபோதும் செய்ய முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்திருந்த அந்த இதயமும் அந்த ஆற்றலும் அவர்களிடத்தில் இருந்திருக்கவில்லை. இது நான் நபிமார்களுக்கு செய்கின்ற அவமரியாதையாகும் என்று ஒருவர் கூறினால் பின்னர் அந்த அறிவிலி என் மீது இட்டுக்கட்டுகின்றார் என்றே பொருள். இதிலிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறேன். நபிமார்களுக்கு கண்ணியமளிப்பதையும், மரியாதை செய்வதையும் எனது ஈமானின் அங்கமாக கருதுகின்றேன். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மைத்துவம் என்பது அனைத்து நபிமார்களின் மீதான .ஈமானின் மகத்தான அம்சமாகவும், எனது நாடி நரம்புகளில் கலந்ததாகவும் இருக்கின்றது. அதனை வெளியேற்றிவிடுவது என்பது எனது அதிகாரத்திற்கு உட்பட்டதல்ல.

நற்பேறு இழந்த மற்றும் கண் இல்லாத எதிரி விரும்பியதை கூறிக் கொள்ளட்டும்

நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட பணியை செய்திருக்கின்றார்கள் என்றால் அதனை தனித்தனியாகவோ அல்லது ஒன்றிணைந்தோ கூட எவராலும் செய்ய முடியாது ذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ

மேலும் இது அல்லாஹ்வின் அருளாகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 56, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * * * *

12-ம் பக்கம் தொடர்ச்சி...
(லண்டன் ஜல்ஸா பேருரை 2023)

இறைவனாக அவர் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. பின்னர் அவர் உண்மையான இறைவனைத் தேடத் துவங்கினார். இந்த சகோதரர் மஸ்ஜித் முஜீபிலும் வந்து சென்று கொண்டிருந்தார். மிஷனரி இன்சார்ஜ் ஸாஹிப் அவர்களுடன் அவர் நீண்ட உரையாடலையும் நிகழ்த்தியுள்ளார். அதிகம் நோய்வாய்ப்பட்டும் இருந்தார். அவர் இறைவனின் இருப்பை தேடத் துவங்கியிருந்தார். மேலும் இந்த அடிப்படையில் அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களும் வழங்கப்பட்டன. மேலும் அவர் என்னுடைய( அதாவது ஹுஸூர் அய்யதஹுல்லாஹ் அவர்களுடைய) குத்பாக்களையும் கேட்டு வந்தார். அவர் மார்ச் 6-ம் தேதி குத்பாவைக் கேட்டார். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில் திருக்குர்ஆனின் மேன்மைகளை நான் எடுத்துரைத்திருந்தேன். அதனை அவர் கேட்டார். அவர் கூறுகின்றார்: இதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை ஏற்படத் துவங்கியது. மேலும், அவர் மீண்டும் மீண்டும் இறைவனின் பெயரைக் கூறி திக்ரே இலாஹியும் செய்து வந்தார். சில நாட்கள் விடுமுறை எடுத்து விட்டு ஹாலந்து சென்று விட்டார். இறைவனைத் தேடுகின்ற பணியில் ஓரிடத்தில் தனிமையை மேற்கொள்ள வேண்டும் மேலும் இறைவனின் இருப்பைக் குறித்து நூல்களை வாசிக்க வேண்டும் என்பதற்காகவும் அவர் அவ்வாறு செய்தார். அதனால் அவருக்கு இறைவனின் இருப்பின் மீது ஈமான் வந்து விட்டது. மேலும் தற்போது அவர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

வக்காலத்தே இஷாஅத் மற்றும் தபாஅத் எனும் துறை இருக்கின்றது. அதன் அறிக்கையின் அடிப்படையில் 105 நாடுகளிலிருந்து கிடைத்த அறிக்கைக்கு ஏற்ப நடப்பு ஆண்டில் 448 பல்வேறு நூல்களும், பிரசுரங்களும், ஃபோல்டர்ஸ் போன்றவைகளும் 47 மொழிகளில் 4,89000 எண்ணிக்கையில் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றில் 47 மொழிகளில் வெளியான நூல்களின் விபரங்களும் இருக்கின்றன. பல்வேறு மொழிகளில் இவை வெளியாகி இருக்கின்றன. உலகம் முழுவதும் ஜமாஅத் அளவிலும், கிளை அமைப்புகள் சார்பாகவும் 26 மொழிகளில் 124 தஃலீமி மற்றும் தர்பிய்யத் சார்ந்த கட்டுரைகளை உள்ளடக்கிய பத்திரிகைகளும், இதழ்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் 26 மொழிகளில் பத்திரிகைகளும், செய்தித்தாள்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இவற்றைக் குறித்த ஒரு விரிவான பட்டியலும் இருக்கின்றது. பல்வேறு மொழிகளில் வெளியாகி இருக்கின்றன. அவற்றில் ஆஃப்ரிக்க மொழிகளும், ஐரோப்பிய மொழிகளும் அடங்கும்.

வக்காலத்தே இஷாஅத் தர்ஸீல் துறையின் அறிக்கை உள்ளது. அதன் அறிக்கைக்கு ஏற்ப 45 நாடுகளில் 24 மொழிகளில் 1,62,000 -க்கும் கூடுதலான நூல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பல்வேறு நாடுகளில் பல்வேறு தலைப்புகளில் 4,814 புத்தகங்கள், 99,56,000 -க்கும் அதிகமான பிரசுரங்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக உலகம் முழுவதும் 15,90,000 நபர்கள் வரை தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது.

கண்காட்சிகள் மற்றும் புக் ஸ்டால்கள் மூலமாகவும் அல்லாஹ்வின் அருளால் பெரும் பணி நடைபெற்று கொண்டிருக்கின்றது. கிடைக்கப் பெற்ற அறிக்கையின் அடிப்படையில் 9,166 கண்காட்சிகளின் மூலம் 4,20,000-க்கும் கூடுதலான நபர்கள் வரை இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது. 1774-க்கும் கூடுதலான திருக்குர்ஆன் மொழியாக்கப் பிரதிகள் பல்வேறு விருந்தினர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. 8,567 புக் ஸ்டால்கள் மற்றும் புத்தகக் கண்காட்சிகள் மூலமாக 17 லட்சத்து 24 ஆயிரத்திற்கும் கூடுதலான நபர்கள் வரை தூதுச் செய்தியை கொண்டு சேர்ப்பதற்கு நற்பேறு கிடைத்துள்ளது.

கண்காட்சிகள் தொடர்பான சம்பவங்களைப் பற்றியும் குறிப்பு இருக்கின்றது. கூறுகின்றார்கள்: செக் குடியரசு நாட்டில் நடைபெற்ற நமது கண்காட்சியில் ஒரு பல்கலைக்கழக மாணவி ஒருவர் வருகை தந்தார். ஒரு மாணவி எழுதினார்: மாணவிகளாகிய நாங்கள் உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். உங்களுடைய இந்த நிகழ்ச்சியானது எங்களை இறைவனை நெருங்கச் செய்து விட்டது.

ஒரு பெண்மணி எழுதினார்: நான் இந்த கண்காட்சியில் கலந்து கொண்டதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். எனக்கு இன்று ஏராளமான நல்ல மற்றும் புதிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன. எனது எண்ணங்களில் இதற்கு முன்னர் இருந்த காழ்ப்புணர்ச்சிகள் எல்லாம் இந்தக் கண்காட்சி மூலம் அகன்று விட்டன. மேலும் தற்போது எனக்கு முன்னால் இஸ்லாத்தின் ஒரு முற்றிலும் புதிய மற்றும் அழகிய சித்திரம் இருக்கின்றது.

கண்காட்சியைக் கண்ட பிறகு மற்றொரு ரியல் எஸ்டேட் ஏஜன்ட் தமது கருத்தை இவ்வாறு எழுதுகின்றார்: இந்தக் கண்காட்சியின் மூலமாக எனது அறிவு அதிகரித்துள்ளது. மேலும் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆன் குறித்து ஏராளமான புதிய விஷயங்கள் தெரிய வந்துள்ளன. எனது சிந்தனையும், மூளையும் இந்த விஷயங்களை ஒப்புக் கொண்டுவிட்டது. இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் எனது கண்களை திறந்து விட்டது. இதற்கு முன்னர் நான் கேள்விப்பட்டிருந்த ஏராளமான விஷயங்கள் இன்ற தவறானதாக நிரூபணமாகிவிட்டன. எங்கு நான் இஸ்லாத்தை எதிர்மறையான மார்க்கமாக கருதி வந்தேனோ இன்று இந்த கண்காட்சியின் மூலமாக எனக்கு இஸ்லாம் முற்றிலும் நேர்மறையான விஷயங்களாகவே இருக்கின்றன.

கண்காட்சியைக் கண்டு ஓர் இளம் மாணவர் இவ்வாறு கூறினார்: நான் சில காலமாக இறைவனை தேடிக் கொண்டிருக்கின்றேன். சரியான மார்க்கத்தை தேடி வருகிறேன். ஆனால், எனக்கு முஸ்லிம்களிடத்தில் பிரிவினையும், குழப்பமும் தென்படுகின்றது.

(இதன் தொடர்ச்சி .... அடுத்த இதழில்)

தமிழாக்கம்
மவ்லவி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**லண்டன் மாநாடு - 2023**

## 2022 -2023 ம் ஆண்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இறங்கக் கூடிய அல்லாஹ்வின் எண்ணற்ற அருட்கொடைகள் மற்றும் இறை உதவிக்கான மகத்தான அடையாளங்களைக் குறித்த ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஈமானை வலுவூட்டக் கூடிய பேருரை

**இந்த காலத்தில் இரண்டு இலட்சத்தி பதினேழாயிரத்தி நூற்றி அறுபத்தி எட்டு பேர் பைஅத் செய்து அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தில் இணைந்திருக்கின்றனர்**

**உலகின் பல்வேறு நாடுகளில் வசிக்கக் கூடிய பல்வேறு நிறங்களையும் இனத்தையும் சார்ந்த நபர்கள் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளக் கூடிய ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவங்கள்**

**329 புதிய ஜமாஅத்கள் நிறுவப்பட்டுள்ளன. 185 பள்ளிவாசல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 124 மிஷன் ஹவுஸ்கள் மற்றும் தப்லீஃக் மையங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது**

**ஈரானிய மொழியாக்கத்துடன் திருக்குர்ஆன் வெளியீடு உட்பட இது வரை மொத்தம் 76 மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கம் வெளியிடப்பட்டுள்ளது**

**ரூஹானீ கஸாயீனுடைய அரபி மொழியாக்கம் முழுமையடைந்து வெளியாகியுள்ளது**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்கள் பல்வேறு மொழிகளில் வெளியாகி இருக்கின்றன. அந்த மொழியாக்க நூல்களின் விபரங்கள் இவையாகும். வங்காள மொழியில் 20 நூல்களும், ஜெர்மன் மொழியில் 10 நூல்களும், இந்தோனேஷியன் மொழியில் 10 நூல்களும், ஆங்கிலத்தில் 7 நூல்களும், தெலுங்கு மொழியில் 4 நூல்களும், அரபி, உருது, ஃபார்ஸி மற்றும் தமிழ் மொழியில் மூன்று, மூன்று நூல்களும், ஃபிரான்ஸீஸி, துருக்கிஷ், லுகான்டா போன்ற மொழிகளில் இரண்டு நூல்களும் போர்த்கீஸீ மற்றும் கர்யோல் மொழிகளில் ஒவ்வொரு நூலும் (நடப்பாண்டில்) வெளியாகியுள்ளன

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டன் ஆண்டு மாநாட்டின் இரண்டாம் நாளில்**

**ஜூலை 29 2023** அன்று **(ஆல்டன், யூ.கே) மாநாட்டுத் திடலில்** ஆற்றிய **பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றைய இந்த நாளில் நிகழும் சொற்பொழிவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது அல்லாஹ் புரிந்த அருட்களைப் பற்றி எடுத்துரைக்கப்படுவதுண்டு. எனவே அந்த அடிப்படையில் சில புள்ளி விபரங்களை நான் எடுத்து வைப்பேன். அல்லாஹ்வின் அருளினால் இந்த ஆண்டு பாகிஸ்தானைத் தவிர்த்து உலகம் முழுவதிலும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத்துகளின் எண்ணிக்கை 329 ஆகும். இந்த புதிய ஜமாஅத்துகளை தவிர்த்து ஆயிரத்தி பதினாறு (1016) புதிய இடங்களில் முதன் முறையாக ஜமாஅத் நிறுவப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு இந்த புதிய ஜமாஅத்துகளை நிறுவுவதில் கோன்கோ கன்ஷா பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. அதன் பிறகு தன்ஸானியா உள்ளது. கோன்கூபிராஸ்வேல் உள்ளது. கானா, நைஜீரியா, செனிகால், கினி பஸாவ், லைபீரியா, பெனின், கினிகனாகிரி, மாலி, டோகோ, ஸிராலியோன், ருவாண்டா, ஐவரிகோஸ்ட், கேம்பியா போன்ற நாடுகளில் புதிய ஜமாஅத்துகள் நிறுவப்பட்டுள்ளன. இதே போன்று மேலும் 25 நாடுகள் இருக்கின்றன. அங்கு சின்ன சின்ன இடங்களில் ஜமாஅத்துகள் நிறுவப்பட்டுள்ளன. இவை அதிக எண்ணிக்கை கொண்ட ஜமாஅத்துகள் ஆகும். இந்த புதிய ஜமாஅத்துகளை நிறுவுவதில் ஈமானை வலுவூட்டக் கூடிய சில சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

கினிபஸாவ் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்: கினிபஸாவ் உடைய டம்பாகாப்ரா மண்டலத்தில் கடுமையான எதிர்ப்பின் காரணமாக அஹ்மதிய்யத்தின் கிளை நிறுவப்பட முடியாமல் இருந்தது. யூ.கே ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தின் போது அந்தப் பகுதியின் சீஃப் சீக்கோ பால்டே ஸாஹிபிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சீக்கோ பால்டே ஸாஹிப் கூறுகின்றார்கள்: எனது பகுதியில் ஜமாஅத்திற்கு எதிராக கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. அதனை ஒரு சீஃப் என்ற ரீதியில் நான் தடுத்திருக்க வேண்டும். ஆனால், முன்னர் நானும் ஜமாஅத்தை கடுமையாக எதிர்த்து வந்தேன். ஆனால், தற்போது இந்த ஜல்ஸாவின் பரக்கத்தாலும், கலீஃபத்துல் மஸீஹை பார்த்தப் பிறகும் மேலும் அவர்கள் கூறியதைக் கேட்டப் பிறகும் உங்களுடைய ஜமாஅத் உண்மையானது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது. மேலும் நான் இன்று எனது 400-க்கும் மேற்பட்ட மக்களுடன் ஜமாஅத்தில் இணைவதாக அறிவிக்கின்றேன் என்று கூறிவிட்டார். அல்லாஹ்வின் அருளினால் இந்தப் பகுதியில் மூன்று புதிய ஜமாஅத்துகள் நிறுவப்பட்டுள்ளன.

கேம்ரூன் முற்றிலும் வடப் பகுதியில் உள்ள மீமே எனும் கிராமத்தில் எம்.டி.ஏ அல் அரபிய்யா மூலமாக ஜமாஅத் உருவாகியுள்ளது. இந்த கிராமம் மார்வஃ நகரத்திலிருந்து எம்பது கி.மீ தொலைவில் உள்ளது. இந்த மக்களுடன் தொலைபேசியில் தொடர்பு ஏற்பட்டது. பின்னர் நமது முஅல்லிம் அபூபக்ர் ஸாஹிப் இரண்டு நபர்களுடன் அங்கு சென்றார். நாங்கள் ஜமாஅத்தைக் குறித்து முழுமையாக அறிவோம் ; பல ஆண்டுகளாக எம்.டி.ஏ அல் அரபிய்யாவைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் ; மேலும் ஜமாஅத்தைக் குறித்து நன்கு அறிந்திருக்கின்றோம் என்று அந்த மக்கள் கூறினர். முஅல்லிம், ஜமாஅத்தைக் குறித்து கூடுதல் அறிமுகத்தை எடுத்துரைத்தார். மேலும், மீண்டும் வருவதற்கான நிகழ்ச்சி நிரலை வடிவமைத்தார். மேலும், அங்கிருந்து நூற்றுக்கும் அதிகமான நபர்கள் பைஅத் செய்து விட்டனர். மேலும் ஜமாஅத்தில் இணைந்துவிட்டனர்.

சம்பவங்களோ ஏராளம் இருக்கின்றன. தற்போது அவற்றை விட்டு விடுகிறேன். ஏனெனில், இன்னும் நிறைய அறிக்கைகள் (கூறுவதற்கு) இருக்கின்றன.

லைபீரியா அமீர் ஸாஹிப் இவ்வாறு அறிக்கை வழங்கியுள்ளார் : அதாவது பூமீகவுண்டியின் ஒரு கிராமத்தில் ஸாகீ டவுணில் நமது குழு தப்லீஃக்கிற்காக சென்றது. கிராமத்தின் இமாமையும், மக்களையும் சந்தித்து தப்லீஃக் நிகழ்ச்சிக்காக தேதியையும்,



A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM
Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE — DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street, Melapalayam, Tirunelveli-627005, Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road, Balaji Nagar Extension, Puzhuthivakkam, Chennai-600091, Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HGEMS HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot, Siphraya, Bangrak, Bangkok - 10500, Thailand
+66 638751327 gemscertify22@gmail.com



**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

நேரத்தையும் தீர்மானித்தார்கள். சிறிய கிராமத்திற்கும் கூட தகவல் கொடுக்கப்பட்டது. மேலும் குறிக்கப்பட்ட நேரத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வருகை மற்றும் வாதத்தைக் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. ஜமாஅத்தில் கிலாஃபத் மற்றும் தப்லீஃக் முயற்சிகளைக் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.இதே போன்று அந்நியர்கள் புறமிருந்தும் ஜமாஅத்தைக் குறித்து பரப்பப்படும் தவறான விஷயங்களைக் குறித்தும் அதன் விளக்கத்தைக் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இறுதியில், அந்தக் கிராமத்தின் இமாம் அப்துல்லாஹ் ஸாஹிப் கூறினார்கள்: இன்று எனக்கு உண்மை வெளிப்பட்டு விட்டது. மேலும், முன்னர் ஜமாஅத்தைப் பற்றி என்னவெல்லாம் கூறப்பட்டனவோ அவை சரியானதாக இருக்கவில்லை. மேலும் கூறுகின்றார்கள்: நீங்கள் கடந்த முறை வந்தபோது, நீங்களோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றியும், திருக்குர்ஆனைப் பற்றியும் எடுத்துக் கூறினீர்கள். அவற்றைக் கேட்டு மிகவும் எங்களுக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது. ஏனெனில், நீங்கள் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு எதிரானவர்கள் ஆவீர்கள் என்றே எங்களுக்கு கூறப்பட்டிருந்தது. ஆனால், உங்களுடைய அனைத்து விஷயங்களுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை மற்றும் திருக்குர்ஆனின் போதனைகளை சுற்றி வலம் வருகின்றது.

எனவே பின்னர் அவர்கள் இந்த விஷயங்களைக் கண்டு தமது ஏராளமான மக்களுடன் பைஅத் செய்துவிட்டார்கள். மேலும் ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள்.

இந்த ஆண்டு புதிதாக கட்டப்பட்ட பள்ளிவாசல்கள் மற்றும் ஜமாஅத்திற்கு கிடைத்த பள்ளிவாசல்களைப் பற்றிய அறிக்கை இருக்கின்றது. அல்லாஹ்வின் சமூகத்தில் இந்த முறை ஒட்டுமொத்தமாக பள்ளிவாசலின் வடிவில் ஜமாஅத் முன்வைத்த பள்ளிவாசல்களின் எண்ணிக்கை 185 ஆகும். அவற்றில் புதிதாக கட்டப்பட்ட பள்ளிவாசல்களின் எண்ணிக்கை 129 ஆகும். மேலும் ஏற்கனவே கட்டப்பட்டு நமக்கு கிடைத்த பள்ளிவாசல்களின் எண்ணிக்கை 56 ஆகும். அவற்றில் பல்வேறு நாடுகளைச் சார்ந்த பள்ளிவாசல்களும் அடங்கும். கானாவில் மிக அதிகமாக இருக்கின்றன. பின்னர் ஸிராலியோனிலும், நைஜீரியாவிலும், பெனின் மற்றும் தன்ஸானிய்யா, புர்கினோஃபாஸ் கோன்கோ கன்ஷாஸா, ஐவரிகோஸ்ட், மாலி, லைபீரியா, கேம்பியா, கினிபஸாவ்,நைஜீரியா, கேம்ரூன், உகண்டா, செனிகால், கினிகனாகரி, சாட், புரோன்டி, சென்ட்ரல் ஆஃப்ரிக்கா, கென்யா, கான்கோ பிரேசில், ஜிம்பாவே, ஸாவ்தோமே ஆகிய நாடுகள் இருக்கின்றன. இந்தியாவிலும் மஸ்ஜித்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தோனேஷியா, பங்களாதேஷ், நேபாளம், ஜெர்மனி, பிரிட்டன், ஃபிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளும் இருக்கின்றன.

பாகிஸ்தானில் முல்லாக்கள் கூறியதன் அடிப்படையில் நிர்வாகமும் நமது பள்ளிவாசல்கள் மற்றும் மினாராக்களை இடிப்பதில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் உலகில் அல்லாஹ் நமக்கு பள்ளிவாசல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றான். மேலும், நாம் தான் இஸ்லத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்து வருகின்றோம்.

சென்டரல் ஆஃப்ரிக்காவின் முபல்லிஃக் எழுதுகின்றார்:

ஒரு நாள், ஒரு செல்வந்தரான வியாபாரி அவர் முஸ்லிமாக இருந்தார்; நமது பள்ளிவாசலை கடந்து சென்றார். மேலும், அந்தப் பள்ளிவாசலை புகைப்படம் எடுத்தார். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசலாகும் என்று அவர் கேட்டதன் அடிப்படையில் அவரிடம் கூறப்பட்டது. அதற்கு, இது மிகவும் அழகிய பள்ளிவாசலாகும்; நீங்கள் வெளிநாட்டிலிருந்து பொறியாளரை அழைத்து வந்தீர்களா?; மேலும் இதற்கு எவ்வளவு செலவு ஆகியுள்ளது? என்று அவர் கேட்டார். நமது முஅல்லிம் ஸாஹிப் கூறினார்: இந்த பள்ளிவாசலில் ஐந்து மில்லியனை விட அதிக பணம் செலவாகவில்லை. அதற்கு அவர், இவ்வளவு விலைவாசிக்கு மத்தியிலும் நீங்கள் இவ்வளவு மலிவான பணத்தில் மஸ்ஜித் கட்டியுள்ளீர்களா? எங்களது மவ்லவிகளோ பத்து பத்து மில்லியன் பணத்தில் அல்லவா மஸ்ஜித் கட்டுகின்றனர்; அவ்வாறிருந்தும் முழுமையடைவதில்லை ; நீங்களோ மிகவும் விரைவாக இதனை முழுமை செய்து இருக்கின்றீர்களே? என்று கூறினார்.

பெல்லீஸ் நாட்டின் அறிக்கை இருக்கின்றது. பலீதன் கிராமம் பெல்லீஸ் நாட்டின் தலைமையகத்திலிருந்து ஐந்து மணி நேர பயணத் தொலைவில் தெற்கில் அமைந்துள்ளது. இங்குள்ள புதிய அஹ்மதிகளைச் சேர்ந்த ஒரு குடும்பம் தங்களது வீட்டின் அருகே பள்ளிவாசல் கட்டுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். தாங்கள் இஸ்லாத்தை குறித்து அதிகம் கற்க வேண்டும் என்று அந்தக் குடும்பம் விரும்பியது. மஸ்ஜிதிற்காக இடத்தை தேடுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது அவர்கள் உடனடியாக தங்களது நிலத்தை வழங்கிவிட்டனர். மேலும் கூறினர்: இறை இல்லத்தை எங்களது சொத்துக்களிலிருந்தே கட்டுவது எங்களுக்கு கண்ணியத்திற்குரிய விஷயமாக இருக்கும் என்று கூறினர். அவர்கள் (பள்ளிவாசல் கட்டுவதற்கு) இடம் மட்டும் கிடைக்கவில்லை ; மாறாக, தமது ஒரு மகனையும் மார்க்கத் தொண்டிற்காக வக்ஃப் செய்து விட்டனர். மேலும், தற்போது இந்த இளைஞர் தலைமையகத்தில் வசித்து வருகின்றார். மேலும், ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்வதற்காக தம்மை ஆயத்தப்படுத்தி வருகின்றார். இவ்வாறு அல்லாஹ் அருளுகின்றான்.

மஸ்ஜித் கட்டுமானத்தில் எதிர்ப்பையும் சந்திக்க நேரிடுகின்றது. பெனின் நாட்டின் அறிக்கை இவ்வாறாகும். அதாவது இங்குள்ள நாதீ டங்கூ மண்டலத்தின் ஒரு கிராமம் இருக்கின்றது. அதில் ஜமாஅத்திற்கு பள்ளிவாசல் கட்டுவதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. நாதீ டங்கூ மிஷனிலிருந்து ஐம்பது கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இதில் 46 கி.மீ வழிப்பாதை மிகவும் மோசமான பாதையாகவும், மலைப் பாதையாகவும் இருக்கின்றது. இந்தக் கிராமம் ஃபோலோனீ சமுதாயத்தை கொண்டதாக இருக்கின்றது. 2016- இல் இங்கு ஜமாஅத் நிறுவப்பட்டது. மேலும் நூற்றி ஐம்பதிற்கும் கூடுதலான பைஅத்துகள் நிகழ்ந்துள்ளன. இங்குள்ள ஜமாஅத் மிகவும் உறுதியான மற்றும் செயல் திறன் மிக்க ஜமாஅத் ஆகும். சத்ர் ஜமாஅத் மஸ்ஜிதிற்காக நிலத்தைக் கொடுத்தார். அந்தப் பகுதியின் சென்ட்ரல் இமாம் மஸ்ஜித் கட்டுமானத்தை தடுத்து நிறுத்தும்படி மக்களிடம் கூறினார். மேலும் பல்வேறு வழிமுறைகளில் அச்சமூட்டுவதற்கு முயற்சி செய்தார். எவ்வாறு இருப்பினும், அவர்கள் எனக்கும் அறிக்கை அனுப்பினர். அவர்கள் சுயமே முயற்சியும் செய்து கொண்டிருந்தனர்; மேலும் துஆவும் செய்து கொண்டிருந்தனர். அல்லாஹ்வின் அருளினால் ஏப்ரல் மாதத்திலேயே அந்தத் தடை அகன்று விட்டது.மஸ்ஜிதிற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.எதிரிகள் மிகவும் அழுத்தம் கொடுத்தனர். மேயரிடமும் புகார் கொடுத்தனர்.ஆனால், நான் அவர்களுக்கு அனுமதி கொடுக்கின்றேன் என்று அவர்களிடம் மேயர் கூறினார். இன்னும் கூறப்போனால், பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்ந்தபோது அந்த மேயர் ஸாஹிப் கலந்து கொண்டார். மேலும் கூறினார்: நான் நோயுற்றிருந்த போதிலும் நான் ஏன் வந்துள்ளேன் என்றால், ஜமாஅத் எவ்வாறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும், எவ்வாறு மார்க்கப் போதனைகளை வழங்கி வருகின்றது என்பதையும் அமைதியை பரப்பி வருகின்றது என்பதையும் நான் அறிவேன்.

சாட் நகரத்தின் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: சாட்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தாருல் ஹிக்மத் என்ற மஸ்ஜித் கட்டப்பட்டதிலிருந்து எதிர்ப்பில் கடும் வேகம் அதிகரித்துள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்வதில்லை என்று சில ஆலிம்கள் ஜமாஅத்திற்கு எதிராக பொய் பிரச்சாரம் செய்து வந்தனர்.இந்த வருடம் பிப்ரவரியில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சாட்டிற்கு முதல் ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கான நற்பேறு கிடைத்தது. அப்போது ஜமாஅத்தின் ஜல்ஸாவிற்கு செல்லக் கூடாது என்று ஆலிம்கள் புறமிருந்து அந்தப் பகுதி மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். அல்லாஹ் அவர்களின் திட்டங்களையும் தோல்வியுறச் செய்து விட்டான். மேலும் முஹல்லாவின் மக்கள்

Proprietor off : 044- 2260 1886
**RAZIK XEROX & TELECOM**
**AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE**
**AO MULTI COLOUR PLAN XEROX**

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 06 MARCH 2025 Issue No 10

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஜல்ஸாவில் கலந்து கொண்டனர். இவ்வாறு கலந்து கொண்ட அந்த மக்களில் அப்துல்லாஹ் ஸாஹிபும் ஒருவராக இருந்தார்.அவர் ஜல்ஸாவின் சந்தர்ப்பத்தில் தனது எண்ணத்தை வெளிப்படுத்தியவாறு கூறினார்: முஸ்லிம்களாகிய எங்களிடத்திலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து அச்சம் இருக்கின்றது. ஆலிம்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து ஏராளமான விஷயங்களை கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நீங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களை எவ்வளவு நேசிக்கின்றீர்களோ அவ்வளவு நேசம் முஸ்லிம்களாகிய நாங்கள் கொள்வதில்லை என்று உங்களுடைய சொற்பொழிவுகளை கேட்டு தெரிந்து கொள்ள முடிகின்றது.

அடுத்து, மிஷன் ஹவுஸ்கள் மற்றும் தப்லீஃக் மையங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. அல்லாஹ்வின் அருளினால் 124 மிஷன் ஹவுஸ்கள் அதிகரித்துள்ளன. இந்த எண்ணிக்கை என்பது உலகின் பல்வேறு நாடுகளின் எண்ணிக்கையாகும். அவற்றில் ஆஃப்ரிக்காவும் அடங்கும். ஐரோப்பாவும் அடங்கும். கிர்கீஸ்தான; ஆஸ்டிரீயா போன்ற நாடுகளும் அடங்கும்.

ரகீம் பிரஸ் அறிக்கை உள்ளது. அல்லாஹ்வின் அருளினால் இந்த வருடம் அவர்கள் ஏராளமான புத்தகங்களை அச்சிட்டுள்ளனர். குறிப்பாக திருக்குர்ஆன் பிரதிகளையும், ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் (ரலி) அவர்களின் திருக்குர்ஆன் வசனங்களின் சொற்பொருள் மொழியாக்கம் போன்றவற்றையும் வெளியிட்டுள்ளனர். மேலும் அல்லாஹ்வின் அருளினால் மிகவும் உயர்தரமான பிரின்டிங் ஆகவும் இருக்கின்றது. மேலும் பையின்டிங் போன்றவையும் உள்ளது. இங்கு டிஸ்பிளேவிலும் வைக்கப்பட்டுள்ளது. மிகவும் குறைந்த விலையில் இது நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

வக்காலதே தஸ்னீஃப் யூ.கே அவர்களுடைய அறிக்கையின்படி திருக்குர்ஆனின் ஈரானிய மொழியாக்கம் இந்த வருடம் வெளியிடப்பட்டுள்ளது. இது வரை 76 மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கம் வெளியாகி இருக்கின்றது. திருக்குர்ஆனின் அல்பானியன் மொழியாக்கப் பிரதியும் தயாராக இருக்கின்றது. மேலும் அச்சிடுவதற்காக பிரஸில் இருக்கின்றது. டேனிஷ் மொழியாக்க திருக்குர்ஆன் பிரதியும் அச்சகத்தில் இருக்கின்றது. இதே போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய ஐந்து நூல்களின் ஆங்கில மொழியாக்கப் பணியும் நடைபெற்றுள்ளது. இதே போன்று இன்னும் ஏராளமான புத்தகங்களின் மொழியாக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு வெளிவந்த அனைத்துப் புத்தகங்களும் புக் ஸ்டாலில் விற்பனைக்கு கிடைக்கின்றது. அல்லாஹ்வின் அருளினால் மிகவும் அழகாகவும் மற்றும் சிறப்பாகவும் பிரின்டிங் செய்யப்பட்டுள்ளது. விலையும் மலிவாக இருக்கின்றது. விலை அதிகம் கிடையாது.

நஸாரத் இஷாஅத் காதியானுடைய அறிக்கை இருக்கின்றது. பதினைந்து வரிகளைக் கொண்ட புதிய வடிவமைப்புடன் திருக்குர்ஆன் நாஸிரா வெளியாகியுள்ளது. அதில் ஒவ்வொரு பக்கத்தின் இறுதியிலும் வசனம் நிறைவடைந்து விடும். இதற்கான செட்டிங் செய்வதிலும், மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் அவர்களுடைய சொற் பொருள் மொழியாக்கத்திலும் அவர்கள் பெரும் பணி செய்துள்ளனர். இது மட்டுமின்றி இந்தி, மலையாளம் மொழியாக்கமும் இருக்கின்றது. குஜ்ராதி மொழியாக்க திருக்குர்ஆன் வெளியாகியுள்ளது. ஹஸ்ரத் மவ்லவி ஷேர் அலீ ஸாஹிப் அவர்களின் திருக்குர்ஆன் மொழியாக்கம் இருக்கின்றது. அதன் மராட்டிய மொழியாக்கம் இருக்கின்றது. இவ்வாறு திருக்குர்ஆன் மொழியாக்கப் பணிகளில் ஏராளமான பணிகளை அவர்கள் செய்திருக்கின்றனர். மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். அந்நியர்களும் கூட வாங்கிச் செல்கின்றனர்.

மாலீ மண்டலத்தின் முரப்பி எழுதுகின்றார்: ஸிகாஸு நகரத்தின் வியாபார மற்றும் கலாச்சார திருவிழா கண்காட்சியில் திருக்குர்ஆன் மற்றும் ஜமாஅத் நூல்களைக் கொண்ட ஒரு புக் ஸ்டால் அமைப்பதற்கு நற்பேறு கிடைத்தது. ஜமாஅத்தைச் சாராத ஒரு காவல்துறை அதிகாரி நமது புக் ஸ்டாலிற்கு வருகை தந்தார். மேலும், ஜமாஅத்தின் ஃபிரஞ்சு மொழியாக்க திருக்குர்ஆனைக் கண்டு எந்த அளவுக்கு தாக்கத்திற்கு ஆளானார் என்றால் அதன் பத்து பிரதிகளை விலைக்கு வாங்கிக் கொண்டார். மேலும் கூறினார்: திருக்குர்ஆனைப் புரிவதற்கு இது மிகச் சிறந்த மொழியாக்கமாகும். அதிக அதிகமான மக்கள் இதிலிருந்து பயன்பெறும் பொருட்டு இந்த பத்துப் பிரதிகளை நான் (எமது) முஹல்லாவின் மஸ்ஜிதில் வைப்பதற்காக வாங்கியுள்ளேன்.

ரூஹானீ கஸாயீனுடைய அரபி மொழியாக்கமும் அல்லாஹ்வின் அருளினால் முழுமையடைந்து வெளியாகியும் விட்டது. இந்த வருடம் 12 நூல்கள் வெளியாகி இருக்கின்றன. மேலும் இவ்வாறு இந்த (அரபி) மொழியாக்கம் முழுமையடைந்து விட்டது.

ஜெர்மன் மொழியிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களின் மொழியாக்கமும் வெளியாகி இருக்கின்றது. 82 நூல்களின் மொழியாக்கப் பணிகள் நடைபெற்று இருக்கின்றன. இந்த வருடமும் அவர்கள் 10 நூல்களை வெளியிட்டுள்ளனர். தெலுங்கு, வங்காளம், தமிழ் போன்ற இந்தியாவின் பல்வேறு மொழிகளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல்வேறு நூல்களும், ஜமாஅத்தின் இதர நூல்களும் வெளியாகி இருக்கின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்கள் பல்வேறு மொழிகளில் வெளியாகி இருக்கின்றன. அந்த மொழியாக்க நூல்களின் விபரங்கள் இவையாகும். வங்காள மொழியில் 20 நூல்களும், ஜெர்மன் மொழியில் 10 நூல்களும், இந்தோனேஷியன் மொழியில் 10 நூல்களும், ஆங்கிலத்தில் 7 நூல்களும், தெலுங்கு மொழியில் 4 நூல்களும், அரபி, உருது, ஃபார்ஸி மற்றும் தமிழ் மொழியில் மூன்று, மூன்று நூல்களும், ஃபிரான்ஸீஸி, துருக்கிஷ், லுகான்டா போன்ற மொழிகளில் இரண்டு நூல்களும் போர்த்கீஸீ மற்றும் கர்யோல் மொழிகளில் ஒவ்வொரு நூலும் வெளியாகியுள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்படட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களைப் பற்றிய விமர்சனங்கள் மற்றும் அதன் மூலம் நிகழ்ந்த பைஅத்துகளைக் குறித்து அமீர் ஸாஹிப் பெல்ஜியம் எழுதுகின்றார்கள்:

Renaud Quiodbach என்ற ஒரு பெல்ஜியம் பேராசிரியர் இருக்கின்றார். மார்ச் மாதம் அவர்களுக்கு இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கான நற்பேறு கிடைத்தது. அவர் ஃபிலாஸஃபியில் phd செய்திருக்கின்றார். அவர் பைஅத் செய்ததன் பின்னணி இவ்வாறாகும்.

அவர் முதலில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவராக இருந்தார். ஆனால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை

இதன் தொடர்ச்சி....9-ம் பக்கம்

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad